


கலை இலக்கியத் திங்கள் இதழ்

## தேர்தல் களத்திலே...

# வாக்கினைத்தந்திட முந்துக!

முப்பது ஆண்டுகள் மூடு பனியிடை
மூழ்கிக் கிடந்தனன் முச்சுடர் நாயகன்!
செப்படி வித்தைகள் செய்த இருளெனும்
சிங்கள ஆட்சியின் அங்கம் நடுங்கிட
அப்பனும் அம்மையும் ஆன்ற புதல்வரும்
ஆழ்ந்து துதித்தடல் ஆடிக் களித்திட
இப்பொழு தெங்களின் இன்னல் துடைத்திட
ஏனைக் குழவியாய்ச் சூரியன் வந்தனன்!

சங்கரன் தங்கிய மன்னூர் திருமலை
சாத்திரம் பூத்தெழில் சான்றநம் யாழ்நகர்
மங்கா வளந்திகழ் மட்டக் களப் பெனும்
மாநில மெங்கணும் மங்குல் கலந்தது!
தங்கக் கதிரவன் எங்கும் படர்ந்தனன்
தாயதி காத்திடத் தன்கதி ரோச்சினன்!
மங்கையர் போற்றுக! மற்றையோ ரேற்றுக!
வாழுங் கவிதையால் பாவலர் வாழ்த்துக!

பச்சைத் துவேசிகள், பாற்பசுப் போர்வையர்
பாதகர் ஆட்சியைப் பாடிப் பிழைப்பவர்
இச்சை தணித்திட எங்களை விற்பதா...?
இல்லை ஒருதுளிச் சாராயம் ஒப்பதா?
கச்சை வரிந்திடும் காளையர் சொல்லுக,
கையில் முறத்தினைக் கன்னிய ரேந்துக!
நிச்சயம் சூரியன் வென்றிட ஆற்றுக
நீதவழ் மண்ணினை நீதியோ டாளுக!

கும்பிடும் கையுளே கொல்படை ஏந்திய
கொங்கணர் சாய்ந்திடக்
கொள்ளுக நெஞ்சுரம்!
நம்புக தந்தையை; நல்வழி சென்றிடும்
நம்படை வீரரை நம்புக! நம்புக!
அம்புலி மெச்சிடும் ஆட்சியை கண்டிட
ஆளணிச் சேனையின் அற்புதம் வென்றிட
தம்முயர் வாக்கினைத் தந்திட முந்துக,
தங்க மணிக்கதிர் சோதியைச் சிந்துக!

நாள்மலர் மாலையை நாயகர் தோளிலே
நம்கரம் சூடிட நாள்வரும் போ(து) அட
ஆள் எடை பார்ப்பது ஆருடை வேலையோ...?
அற்பர் செயலினுக் காக்கினை நாளையோ?
ஆள்வது நம்சுயம்; ஆளப் படுவது
அந்நியர் வித்திலே ஆன அயோக்கியம்!
நாள் இருபத் தியொன்(று) ஆடியில் ஆதவன்
நம்குல நாயக னவதே காரியம்!

—பாண்டியூரான்

# கூட்டணி

ஓரணியாய் சீரணியாய்
ஓங்கிநிற்கும் பேரணியாய்
தாரணியைக் காக்கவந்த
தமிழணி — இது
தந்திடுமெம் தாயகத்தைக்
காண் இனி!

ஓரணியின் உழைப்பினிலே
ஏழையெல்லாம் முன்னேறித்
தேரணியில் செல்லவைக்கும்
திரு அணி — இது
தீந்தமிழர் வெற்றியணி
தேர் இனி!

தமிழீழக் கொள்கையிலே
தன்னுயிரை வைத்துழைத்து
தமிழ் மானங் காப்பதுதான்
உன்பணி — தமிழ்
காப்பதற்கு தருணமிது
நீ விழி

தமிழ் மகனே நீயெழுந்து
தந்தையவர் லட்சியமாம்
தமிழீழக் கொள்கையிலே
தாள்பணி — இனி
தமிழீழம் பூக்குமுண்மை
நாம் தனி

பார் அணி இது பெரும் அணி
பைந்தமிழர் தமிழீழப்
படையணி இன்று
இவ்வணியை எதிர்த்து நின்று
வெல்பவர்தான் யார் இனி!

—தமிழன்பன்

# தமிழீழ(ம்) நாடடா!

"துணிவே நம்துணை" நம்பிக்
களம்செல்லடா— பகைத்
துயர்வந்தால் எதிர் நின்று அதை
வெல்லடா!
வணங்காத தலை கொண்ட இனம்
நாம் அடா— வீர
வழிமாறி உயிர்வாழ்வோ? செயல்வீரமே
மணக்கின்ற தமிழ் ஈழ மலர்ச்சோலையில்—
பூத்து
மலர்கின்ற மொட்டே நீ மணம் வீசியே
அணியாகத் தமிழ்வீர வரலாற்றிலே— ஓர்
அடையாளம் இடம்காணும் வகை
நாடடா

—"வித்தகன்"

NE
TOILE
மின்
கிளை;
79.
தயாரிப்

சுடர்
CHUDAR

(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு 2008
ஆனி — 1977
சுடர் — நான்கு
ஒளி — இரண்டு
ஆரம்பம்: சித்திரை 1975

வெளியிடுபவர்கள்:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ்லிமிடெட்
194, ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12.

ஆசிரியர்:- கோவை மகேசன்


# யூலை இருபத்தொன்று!

400 ஆண்டுகால் அடிமைத்தளையை அறுத்துக்கொள்ள ஈழத் தமிழினம் முடிவு எடுத்து விட்டது!

முப்பது ஆண்டுகால சிங்கள ஏகாதிபத்தியக் கொடுமைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்திட தமிழ் ஈழ மக்கள் உறுதி பூண்டுவிட்டார்கள்!

'தங்கத் தமிழ் ஈழம் தமிழனுக்கே தமிழனுக்கே' என்ற உணர்ச்சிக் கவிஞரின் எழுச்சி முழக்கம் இன்று ஊரெல்லாம் எதிரொலிக்கிறது!

அங்குலமும் இனி நாங்கள் அயல் வெறியர் ஆளவிடோம் என்று ஆர்ப்பரிக்கின்றனர் சிங்க நிகர் செந்தமிழ்க் காளையர்!

இந்த சுதந்திர ஆவேசத்தை— விடுதலையெழுச்சியை— உலகமெலாம் அறிய ஜனநாயக ரீதியில்— எடுத்துக்காட்டவேண்டிய நாள்தான் யூலை 21 — பொதுத் தேர்தல்நாள்!

நமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையப்போகிற நாள் தான் யூலை 21!

பொதுத் தேர்தலை தமிழ் ஈழம் பற்றிய ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி பிரகடனப்படுத்தியிருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கென ஒரு சொந்தத் தாயகத்தை— தமிழ் ஈழ நாட்டை— மீள அமைத்துக்கொள்ள விரும்புகிறார்களா— அல்லது—

சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின்கீழ் தொடர்ந்து அல்லற்பட்டு, அடிமைகளாகி அழிந்தொழியப்போகிறார்களா? என்பதே தேர்தலின்போது விடைகாணப்படவேண்டிய ஒரே ஒரு கேள்வியாகும்!

வேறு எந்தப் பிரச்சினையும் இந்தத் தேர்தலின்போது தமிழ் மக்களின் உள்ளங்களில் தலைகாட்டக்கூடாது.

சுதந்திரத்தின் முன் மற்றப் பிரச்சினைகள் யாவும் சிறு தூசிகள்தாம்! ஊர்ப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை, பிரதேசப்பிரச்சினை, பாலங்கள், பள்ளிக்கூடங்கள், ஆசிரியர் வேலைகள், சங்கக்கடை உத்தியோகங்கள், போன்ற சில்லறைப் பிரச்சினைகள் எதுவும் இப்போது கிஞ்சிற்றும் தலை காட்டக்கூடாது; பழகியவன், அறிந்தவன், தெரிந்தவன், பலமுறை கேட்டுத் தோற்றவன், 20 ஆண்டு காலம் இருந்தவன், என்பன போன்ற அனுதாப சிந்தனைகளுக்கும் இத்தேர்தலில் இடமில்லை!

ஆண்ட தமிழினம் மீண்டும் ஆளவேண்டுமா— வேண்டாமா? என்பதே விடைகாண வேண்டிய ஒரே கேள்வி!

ஒரு சுதந்திர, மத சார்பற்ற சமதர்ம சோசலிச தமிழ் ஈழ அரசை அமைத்து தமிழினத்தின் சுதந்திரத்தை மீட்கும் திட்டத்தை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றே புத்தளம் உட்பட தமிழ் ஈழத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிடுகிறது,

தமிழ் ஈழம் அனைத்தையும் தழுவி, ஆழமாக வேரோடி அசையா நெடுங்குன்றமாக— தமிழ் தேசிய இனத்தின் பாதுகாப்பு அரணாக— விடுதலைப் பேரியக்கமாக இன்று விளங்குவது தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றே!

எனவே— யூலை 21 பொதுத் தேர்தலில் சுதந்திரத்தை நாடி நிற்கும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் ஒவ்வொரு வாக்கினையும் சிந்தாமல் சிதறாமல் கூட்டணி வேட்பாளருக்கே போட்டு— தமிழ் ஈழம் அமைத்திட தமிழ் ஈழ மக்கள் முடிவுசெய்துவிட்டார்கள் என்பதை ஒழிவுமறைவுக்கிடமின்றி உலகறிய ஓங்கி முரசறைந்து கூறுவார்களாக.

# தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். கட்டியுள்ள கோவில்

பரங்கிமலையிலிருந்து பூவிருந்த வல்லிக்குப் போகும் சாலையிலிருக்கும் தம்து தோட்டத்தில், எங்களை இன் முகத்தோடு கை கூப்பி வரவேற்றார் திரு. எம். ஜி. ராமச்சந்திரன். படப் பிடிப்பு முடிந்த களைப்புத் தீர குளித்து விட்டு 'ஜில்' லென்று காட்சி தந்த அவரைப் பார்த்ததுமே மனத்திற்குக் குளிர்ச்சியாக இருந்தது. 'எம். ஜி. ஆர். தோட்டம்' என்று புகழ்பெற்ற அந்த இடத்தைக் காணவேண்டும் என்ற ஆவலில் 'தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கலாமா? என்று கேட்டேன்.



"தோட்டத்திலேஎன்ன இருக்கு? ரொம்ப சாதாரணமா ஏதோ...' என்று அடக்கத்துடன் கூறினார் அவர்.

ஏழரை ஏகரா பரப்புள்ள அந்தத் தோட்டத்தில் வாழை மரங்களையும் மாமரங்களையும் தவிர காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. நெல் விளைச்சலும் உண்டு. மத்தியில் ஒரு நீச்சல் குளம் இருக்கிறது. படம் போட்டுப் பார்க்க ஒரு சிறு தியேட்டரும் இருக்கிறது. தேகப்பயிற்சி செய்வதற்காக ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

'அண்ணாச்சிக்கு எடை அதிகமாயிடுத்துன்னா இங்கேதான் "எக்ஸைஸ்" செய்வார்' என்று உடன்வந்த பழைய நடிகர் திருப்பதி சாமி விளக்கம் கொடுத்தார்.

அந்தத் தோட்டத்தினுள் இருக்கும் அழகான பங்களாவுக்குத் தாயின் நினைவாக 'அன்னை நிலையம்' என்று பெயரிட்டிருக்கிறார் எம். ஜி. ஆர். அதற்கு கிழக்கே ஒரு மண்டபம் தென்பட்டது.

"அது என்ன மண்டபம்?" என்று கேட்டேன் நான்.

"அதுதான் கோயில்?"

"என்ன, கோயிலா?"

"ஆமாம். என் தாயாருடைய கோயில். அங்கே என் அன்னையின் படம் இருக்கிறது. அவர்தான் நான் வணங்கும் கடவுள்."

"அவங்களை கும்பிடாமெ அண்ணாச்சி வெளியே கிளம்ப மாட்டார். வாரத்திற்கு இருமுறை படத்திற்கு பூ மாலை போடுவோம். தினமும் விளக்கேற்றி வைப்போம்" என்று கூறினார் திருப்பதி சாமி.


"சினிமாவில் கோயில் காட்சிகளில் தோன்றி நடிப்பதில்லை என்ற கொள்கையை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று, பெற்ற அன்னைக்குக் கோயில் கட்டிக் கும்பிடும் எம். ஜி. ஆரிடம் கேட்டேன்.

"அப்படியொரு கொள்கையே எனக்குக் கிடையாதே. எதனால் இப்படிக் கேட்கிறீர்கள்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் அவர்.

"'காஞ்சித் தலைவ'னில், நீங்கள் கோயிலுக்குள் நுழைவது போலவும் வெளியே வருவது போலவும் ஒரு காட்சி வருகிறதே, அது ஏன்?"

"அந்தக் காட்சியை முதலில் நினைத்தபடி எடுக்க முடியாமல் போனதுதான் அதற்குக் காரணம். என்னைப் பற்றி ஒரு தவறான எண்ணம் பரவியிருக்கிறது. நானோ, கழகமோ கோயிலுக்குப் போகக் கூடாது என்றோ, கடவுள் இல்லை யென்றோ, பிரசாரம் செய்ததில்லை. கடவுள் பெயரால் நாட்டில் மூட நம்பிக்கைகள் பெருகுவதையும், சோம்பேறித்தனம் வளருவதையும் தான் எதிர்த்து வந்திருக்கிறோம். 'ஜெனோவா' படத்தில் நான் நடிக்க வில்லையா! இப்போது 'பரம பிதா' வில் நடிக்கிறேனே, அதுவும் மத சம்பந்தமான கதைதானே? 'பெரிய இடத்துப் பெண்'ணில் எல்லோரையும் நான் கோயிலுக்குள் அழைத்துச் செல்வது போல் ஒரு காட்சி வருகிறதே! சினிமா இருக்கட்டும். சமீபத்தில் மருதமலை கோயிலுக்குச் சென்று விளக்கேற்றி வைத்தேனே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?"

நான் ஒன்றும் சொல்லவில்லை!



மூதறிஞர் தந்தை செல்வாவுடன் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.

பேசிக் கொண்டே மேற்குப் புறமிருந்த ஒரு சிறு வீட்டினுள் நுழைந்தோம். அது ஒரு "அவுட்ஹவுஸ்" மாதிரி இருந்தது. அறை முழுதும் சாம்பிராணி புகைப்படலம் சூழ்ந்திருந்தது.

"இந்த இடத்தை ஒரு கலைக்கூடமாக்கத் திட்டமிட்டிருக்கிறேன். இன்னும் படங்களெல்லாம் வரவில்லை" என்று எம். ஜி. ஆர். சொன்னதும், அந்த அறையில் ஒரு வௌவால் பறந்து வந்து எங்களை வட்டமிட்டது! சாம்பிராணி மணமும் வௌவால் ஓட்டமும் சேர்ந்து அவ்விடம் ஒரு கலைக் கோயிலாகவே காட்சியளித்தது!

நாங்கள் அமர்ந்தோம். சிற்றுண்டி வந்தது. ஐஸ்கிரீமும் காப்பியும் வந்தன. அவற்றைக் கொண்டு வந்த தோழரைப் பார்த்து எம். ஜி. ஆர். "இவங்க வந்த டாக்சி வெளியே நிக்குதே, அந்த டிரைவருக்குப் பலகாரம் கொடுத்தீங்களா?" என்று குரலைச் சற்றுத் தாழ்த்திக் கேட்டார்.

"ஓ, கொடுத்து விட்டேனே" என்றார் அனுபவமிக்க அந்தத் தோழர்.

சிற்றுண்டிக்குப் பிறகு, "வருகிறீர்களா, என்பாதாள அறையைக் காட்டுகிறேன்', என்று அழைத்தார் எம். ஜி. ஆர்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"'ரகசிய அறையைக் காட்டுகிறேன், வாருங்கள்' என்று அழைக்கும் துணிச்சல் உங்களுக்குத்தான் வரும்" என்று நான் சொன்னதும், வந்து பாருங்கள், மறைப்பதற்கு ஒன்றுமில்லை" என்றார் அவர் புன்முறுவலுடன்.

அவரைப் பின் தொடர்ந்தோம். அடுத்த அறைக்குள் சென்று தரையிலிருந்த ஒரு கதவைத் திறந்தார் அவர். "பின்னாலேயே வாருங்கள்" என்று சொல்லியபடியே கீழே இறங்கினார். சினிமாவில் 'கிளைமாக்ஸ் சீன் சண்டை நடப்பதற்காக ஒரு படிக்கட்டு வழியாகக் கீழே இறங்கிப் போவார்களே. அது மாதிரி சென்றோம்.

கீழே இருந்த அறையில், எம். ஜி. ஆர். மறைத்து வைத்திருந்த 'செல்வங்க'ளைக் கண்டு மலைத்துப்போனோம். அழகான அந்த அறையின் சுவரை மகான்களின் படங்கள் அலங்கரித்திருந்தன. காந்திஜி, நேருஜி, தாகூர் விவே

# தமிழ் வாழை மரம்

அதோ அந்த மேட்டு நிலத்தை நான் ஒரு நோட்டம் விடுகிறேன்;
அதில் ஒரு வெறுமையே தெரிகிறது.
நேற்று ஒரு வாழை குலைபோட்டு பல காய்பரப்பி தலைநிமிர்ந்து நின்றது அங்கே.
தியாகத்தில் வாழ்ந்த குலம் அது.
உயிரை இழந்து பல கனிகளை கொடுப்பது அதன் பரம்பரை.
உதறுகாய் பருவத்தில் முற்றியிருந்த தன் காய்களை ஒரு தடவை பார்த்துவிட்டு ஆகாயத்திலும் கண்ணோட்டியது வாழை.
காயிலே கண்வைத்து கனி உண்ணக் காத்திருக்கும் காக்கைகள் அங்கே வட்டமிட்டன.
இவ்வளவு பாடுபட்டு இப்படி உருவாக்கிய காய்களை கனியாகும் தறுவாயில் காக்கைக்கு கொடுத்துவிட அது அரும்பவில்லை.
வேருன்ற வைத்து வியர்வையால் நீரூற்றிய மனிதனை அது மறந்துவிட வில்லை.
கயவனின் கையிலே கனிகளைக் கொடுப்பதா?
வாழை கூறிற்று:-

> "காய்கள் கனியாகுமுன் காலம் கனிந்துவிட்டது,
> தியாகம் என் பரம்பரைச் சொத்து."

தலையிலே குலையைத் தாங்கிய வாழை இடையிலே வெட்டுகளை வாங்கிக்கொண்டு மடிந்து குனிந்தது. என்றுமே பணியாத வாழை நேற்று குனிந்தது, தன் குட்டிகளை பார்த்தது.
அதன் உதிரம் அந்த குழந்தைகளை தழுவி உருண்டன.
வாழை பெருமையோடு சொல்லிற்று:-
"நான் ஊட்டி வளர்த்த குழந்தைகள் என் உதிரத்தில் தளிர்க்கின்றன. கனிகளைக் காப்பாற்றியதோடு மட்டும் என் பணி முடிந்துவிடவில்லை பல குலைகளை தரும்படி என் குழந்தைகளை உருவாக்கிய பின்னரே மடிகிறேன்;
அது நிறைவோடு மறைந்துவிட்டது, என்கண்கள் பனிக்கின்றன.
"எட பிள்ளை" என்று எங்களை எழிலோடு அழைக்கின்ற சிவகுமாரன் என் கலங்கிய கண்களுக்குள் களி நடம் புரிகிறான்.
தமிழினத்திற்கு வாழ்வளிக்க தன் வாழ்வையே அழித்துக்கொண்ட தங்கத்தமிழ்வாழை எங்கள் சிவகுமாரன்.

—அமிர்த நதி சுதர்சன்

---

கானந்தர், புத்தர், ராமலிங்க சுவாமிகள், சாரதாமணி அம்மையார், பாரதி, திருவள்ளுவர் என்று 'அன்புச் செல்வங்கள்' வரிசையாக அங்கு கொலுவீற்றிருந்த காட்சி உள்ளத்தைக் கொள்ளை கொண்டு எங்களை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தியது. மானசீகமாக அத்தனை பேருக்கும் அஞ்சலி செலுத்தி விட்டு. இத்தனை ஆழமான பக்தியும் பண்பும் குடிகொண்டிருக்கும் மக்கள் திலகத்தை மனமார வாழ்த்தினோம்.

பிறகு "கீழே கட்டி வைத்திருக்கும் புத்தகங்கள் எல்லாம் என்ன?" என்று கேட்டேன்.

"அத்தனை நூல்களும் இம்மகான்களைப் பற்றிய கருத்தோவியங்கள். அவர்கள் சிந்தனையில் பிறந்த அறிவுரைகளும் இருக்கின்றன" என்று சொன்னார் அருகிலிருந்த வித்வான் வே. லட்சுமணன்.

"இந்த இடத்தை ஒரு சிறந்த நூல்நிலையமாக்க வேண்டும் என்பது என் அவா. இங்கு சற்று உரக்கப் பேசினாலும் எதிரொலி எழும்பும். ஆகவே இங்கு வருபவர்கள் பேசாமல் அமைதியாக அறிவுச் செல்வங்களில் மனத்தைப் பறி கொடுக்கவேண்டும் என்றே இப்படியொரு அறையைக் கட்டச் சொன்னேன். புறவாழ்க்கையிலிருந்து நிம்மதி பெறுவதற்காக எனக்கு மட்டுமின்றி, என் அருமைத் தோழர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இந்நூல் நிலையத்தை அமைத்திருக்கிறேன். என் காலத்திற்குப் பிறகு இதுவும், மேலேயுள்ள கலைக் கோயிலும் பொதுச் சொத்தாக ஆவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறேன்" என்று புன்முறுவலுக்கிடையே தன்னடக்கத்துடன் கூறினார் அவர்.

எம். ஜி. ஆர். காப்பி அருந்துவதில்லை, வெற்றிலை சுவைப்பதில்லை, புகைப் பிடிப்பதில்லை. ஆகவே அவருடைய நண்பர்களில் சிலர் தம் எதிரில் புகை பிடிக்கத் தயங்குவதாகக் கூறினார் அவர். இவரிடம் பெருமதிப்புக் கொண்ட ஒரு மதுரை நண்பர், எம். ஜி. ஆரின் உருவத்தைப் போஸ்டரில் கண்டால் கூட சிகரெட்டை மறைத்துக் கொண்டு விடுவாராம்! சற்றுத் தொலைவு சென்ற பிறகு தான் மீண்டும் புகைப்பாராம்!

(நன்றி. ஆனந்தவிகடன்)

# மக்கள் பலமே மகத்தான வெற்றியின் அடித்தளம்!

—"மணி மணாளன்"

நமது தலைவிதியை நாமே நிர்ணயிக்க வேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது!

விதியை மதியால் வெல்வது சாத்தியமில்லையாயினும், சிறிதுநேரம் தடுத்து நிறுத்த முயற்சிப்பது நமது கடமை. நோயாளி மரணப் படுக்கையில் இருக்கிறான் என்பதற்காக, வைத்தியன் தனது முயற்சியைத் தளர விடுவதில்லை.

நமது தலைவிதி, நடக்கவிருக்கும் தேர்தல் முடிவில் தங்கியிருக்கிறது. வெள்ளம் வருமுன் அணைகட்டுவது மதியுடமை.

காலத்தின் ஓட்டத்தில் பல கட்சிகள் உதயமாகலாம்; பெருந் தலைவர்கள், தியாகிகள் தோன்றலாம். தலைவர்களை அவர்கள் வாழுங் காலத்திலேயே மதிக்கும் பண்பு ஏனோ மக்களிடம் இருப்பதில்லை.

ஆரம்பத்தில் "அனைத்திலங்கை தமிழ்க் காங்கிரஸ்" என்ற அமைப்பில் 1947 - ஆகஸ்டில் தேர்தலில் குதித்தபோது நமது தமிழ் மக்களுக்குக் கிடைத்த வெற்றி மகத்தானது. மறைந்த இரு பெருந் தலைவர்களின் கீழ், போட்டியிட்ட ஒன்பது இடங்களில் ஏழு இடங்கள் வென்றன என்றால் பெருமையில்லையா—? இந்த அமைப்பு பிளவுபட்டு 1952— மேயில் நடந்த தேர்தலில் "தமிழ்க் காங்கிரஸ்" என்றும், "தமிழரசுக் கட்சி" என்றும் கோதாவில் குதித்தன. ஒற்றுமையில் கிடைத்த பலம், அப்போது எமக்குக் கிடைக்கவில்லை. இந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தலைவராக அமரர் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவராக அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களும் நின்று தத்தம் கொள்கைகளை வலியுறுத்தித் தேர்தலில் குதித்தனர் என்பது நாடறியும்.

வட — தென் துருவங்களாக நின்று அமரர்களாகிவிட்ட இந்த இருபெரும் தலைவர்களும், அணையுமுன் தீபம் சுடர்விட்டுப் பிரகாசிப்பதுபோல் — வடமுனை தென்முனையைக் கவரும் என்ற கோட்பாட்டை நிரூபிப்பதுபோல் — ஒரே கூட்டணியின் கீழ் இணைந்தனர்.

இந்த இரு பெருஞ் சக்திகளும் இணைந்ததால், பெரும் பான்மைப் பலம் வாய்ந்த கட்சிகளின் தலைவர்கள்கூட சிறிது திகைத்தனர்; நமது கஷ்ட காலம் — காலனுக்கு இது பொறுக்கவில்லை. இரண்டு தலைவர்களையுமே நம்மிடமிருந்து கவர்ந்து சென்றுவிட்டான்.

இன்று கைவிடப்பட்ட நம்மையெல்லாம் கைதூக்கி விடுவதற்கு, அவர்கள் விட்டுச் சென்ற கூட்டணி அமைப்பால் தான் சாத்தியமாகும்.

மக்களது வாக்குகளை வேட்டையாடிச் சிம்மாசனமேறி, அதே மக்களைச் சுரண்டி வாழும் பித்தலாட்டத் தலைவர்களை இனியும் நாம் நம்பிக் கொண்டிருக்கக் கூடாது.

ஏற்றிவிட்ட ஏணியையே உதைத்துத் தள்ளிவிட்டு மேலே நின்று அட்டகாசம் போட்ட பலர், ஏணியின்றிக் கீழே விழுந்து படுகாய முற்றிருக்கிறார்கள். திரும்பவும் அவர்களுக்கு ஏறச் சந்தர்ப்பம் கொடுக்கலாம் என நினைக்கிறீர்களா...? பாவம் நொண்டிகள்! இவ்வளவிலாவது பிழைத்துப் போகட்டும்! மறுமுறை ஏற முயன்றால் மரணம்தான் பரிசாகக் கிடைக்கும். அவர்களைக் கொல்வதில் நமக்கென்ன லாபம்—?

"தமிழனுக்கு விடுதலை வேண்டும்; அவனுக்கென்றோர் தனி நாடு வேண்டும்" என்ற தாரக மந்திரத்தை வைத்துக் கொண்டே பல கட்சிகள் குட்டையைக் கிளறுகின்றன.

தமிழ் மக்களுக்கோ இந்த மந்திரம் பலிக்க வேண்டுமே என்ற எண்ணம்! ஆனால், எந்தத் தெய்வத்தை வணங்கினால் பலன் தருமென்பதுதான் அவர்களுக்குப் புரியவில்லை. எல்லாத் தெய்வங்களையும் வணங்க வேண்டுமே என்ற அச்சம் அவர்களுக்கு!

கோவில்கள் வேறுபட்டாலும் தெய்வம் ஒன்றே என்பதை ஏனோ மனிதமனம் ஏற்க மறக்கிறது. ஒரே தெய்வத்தை வழிபட்டால் விமோசனம் கிடைக்காதா என்ன—?

இந்த இடத்தில் மக்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும். போட்டிகள் அவசியம் தான்; அவை பொருமையின் பிரதிபலிப்பாக இருக்கக் கூடாது. எங்கள் வாக்குகளைப் பெற்று ஜெயிப்பவர், எங்கள் தலைகளின் மேலேயே நடந்து, எங்கள் தலைகளையே உருட்டி வேடிக்கை பார்க்கும் சுயநலவாதியாக வாழப் போவதை நாம் சகிக்கலாமா—?

மக்களின் வாக்குகளைச் செல்வாக்காக்கி மேன்மையுறும் தலைவர், மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய தொண்டனாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் உண்மையான மக்கள் தலைவராக முடியும்.

நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் தமிழர் மத்தியிலேயே சில கட்சிகள் குதிக்கின்

றன. சுயேச்சையாகவும் பலர் (வாக்குகளைப் பிரிப்பதற்கென்றே) கோதாவில் இறங்குகின்றனர். வேண்டுமென்றே சமூக விரோதிகளால் சுயேச்சையாகக் கேட்கத் தூண்டப்படுவதாகக் கூட அறியக் கிடக்கிறது. இந்தச் சுயேச்சைகள், ஸ்திரமற்ற கட்சிகள் எல்லாம் தேர்தலில் மண் கவ்வும் படியாக மக்கள் தீர்ப்பளிக்க வேண்டும். இந்தத் தேர்தலில் மக்கள் அளிக்கப் போகும் தீர்ப்பில்தான் நமது தமிழ் மக்களின் வாழ்க்கையே தங்கிக் கிடக்கிறது.

நம்மை வழிநடத்த ஒரு தலைவர் தேவை; நம்மைக் காப்பாற்ற ஒரு கட்சி தேவை. இந்த வகையில் மக்கள் நலனில் அக்கறை காட்டக் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலப்படுத்தி அனுப்பி வைப்பதே மதியுடைமையாகும்.

நீங்களே சிந்தித்துப் பாருங்கள்—தேர்தலில் குதிக்கின்ற எல்லாக் கட்சிகளுக்கும் தமிழுரிமை பெறுவதுதான் நோக்கமென்றால், அவையெல்லாம் ஏன் ஒன்று திரண்டு ஒரே குடையின்கீழ் இயங்க மறுக்கின்றன—? ஒவ்வொன்றும் சுயநலத்தின் அடிப்படையில் போட்டியிடுவதுதான் இதற்குக் காரணம்!

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு''

என்று படித்திருந்தும் உணராத பேர்வழிகளை அனுப்புவதால் நமக்கென்ன விமோசனம் வந்துவிடப் போகிறது—?

ஒரே கல்லூரியிலேயே படிக்கும் மாணவர்கள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்கிறார்கள். இரு சாராரும் ஒரு சாராரை மற்றவர் வெல்ல வேண்டுமென்ற முனைப்பிலேயே போட்டியிடுகிறார்கள்; ஆக்ரோஷத்துடன் விளையாடி தம்முள் சமர்புரியும் இந்த வீரர்கள் பிறிதொரு கல்லூரியுடன் போட்டியிடப் போகிறார்கள். அங்கும் இவர்கள் எதிரிகளாக நிற்க முடியுமா—? இப்பொழுது இந்த இரு சாராரும் சேர்ந்து மற்றைய கல்லூரியையே எதிர்க்கத் தலைப்படுகிறார்கள். இந்தச் சாதாரண நிகழ்ச்சி நமது உள்ளத்தில் தெளிவாக வேண்டும்.

நமக்குள் ஆயிரம் கொள்கைகள், கோட்பாடுகள், கட்சி பேதங்கள், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தமிழர் உரிமைப் போராட்டம் என்று குறிப்பிடும் போது நாம் எல்லோரும் ஒற்றுமையாகவல்லவா இயங்க வேண்டும்! இந்த ஒற்றுமை நம்மிடம் இல்லையென்றால் எதிரிகள் நம்மைக் கைப்பொம்மைகளாக விளையாடத் தொடங்கிவிடுவார்கள்.

நமது பலவீனங்கள் ஒவ்வொன்றையும், எதிரி தனது வெற்றியின் படிக்கட்டுகளாகக் கருதுகிறான். நமக்குள் பலவீனம் இருக்கிற வரையில் அவன் படிக்கட்டுகள் உறுதியாக இருக்கும். நாம் பலசாலிகளாக இருந்தால் அவனது படிக்கட்டுகள் உடைந்துவிடும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் (வட பகுதி) பலத்த காவலராக—கொள்கை உறுதிப்பாடு குலையாத திடசித்த மனது கொண்டவராக — தான் செல்கின்ற வழியில் தனது பயணம் சரிவரத் தொடர வேண்டுமென்பதற்காக, தான் வகித்து வந்த பெரும் பதவியையும் துறந்து கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட திரு. வி. பொன்னம்பலம் அவர்களே, தமிழர் விமோசனத்திற்காகப் பாடுபடும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்காக ஒற்றுமையாக வழிவிட்டிருக்கின்றார்.

ஆனால்—கட்சிக்காக உழைக்காமல், கட்சியின் பேரில் பெயரும் புகழும் பதவியும் பெற வேண்டுமென்ற சுய தேவைகளின் அடிப்படையில் பல கட்சிகள் போட்டியில் குதிப்பது மனவருத்தத்திற்குரிய ஒரு செயலாகும்.

உண்மையில் தமிழர் விமோசனம்தான் இவர்கள் குறிக்கோளென்றால், ஒன்று திரண்டு கூட்டணியின் வெற்றிக்காக உழைக்கலாமே...

''கூட்டணி'' என்ற சொல்லுக்கு இவர்கள் சரியாக அர்த்தம் புரிந்தவர்களாக இருந்தால், தாமும் கூட்டாக அதனுடன் அணிதிரண்டு விமோசனம் பெற விழையலாமல்லவா—?

ஆயிரத்தை இடித்துச் சொன்னாலும் இந்தச் சுயநலக் கிருமிகளின் செவியில் ஏறாது. எனவே இவர்கள் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு ஏமாறாமல் செயற்பட வேண்டியது மக்கள் கடனாகும்.

பழம் இனிக்கிறது என்பதற்காக, நச்சுப் பழத்தைச் சுவைக்கலாமா? மருந்து கசக்கிறது என்பதற்காக, நோயை முற்றவிடலாமா?

ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்குப் பல இடையூறுகள் இருக்கத்தான் செய்யும். எதிர்ப்புகளுக்குப் பயந்தால் உருப்படியாக எதையும் சாதிக்க முடியாதே!

மக்களின் உறுதியான மனப்பாங்கில்—அவர்தம் பங்களிப்பில்தான் தமிழ் மக்களின் மறுமலர்ச்சிக் காலத்தின் உதயம் தெளிவாகும்.

கிழக்கு வெளிக்கிறது; அதோ... உதயசூரியன் வானத்தில் தோன்றுகிறான்!

# தனித் தமிழ் அறிஞர்

— ஓவியர் ச. பெனடிக்ற்

முதன் முதலில் இச் சித்திரத்தைப் பாருங்கள்! யாராக இருக்கலாம்—விளங்கவில்லையா? படித்துப்பாருங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

*1973* இல் மைசூர் மாநிலக் கல்லூரிகளின் கலைப் பேச்சிற்குரிய அழைப்பை ஏற்றுச் சென்றேன். தமிழ்ப் பேராசிரியர் வ. பெருமாள் என்பவர் இந்த மனிதரைப்பற்றி அடிக்கடி என்னிடம் கூறிக்கொள்வார் மட்டுமல்ல; கண்டிப்பாக ஓவியர் பார்க்கவேண்டிய தமிழ் அறிஞர் என்றும் குறிப்பிட்டிருந்தார். மைசூரிலிருந்து சென்னைக்குத் திரும்பும் வழியில் காட்பாடியில் இறங்கி இவர் இருக்கும் வீட்டிற்கு ஒருமுறை சென்றேன். வணக்கம் கூறி நான் வந்த நோக்கத்தைத் தெரிவித்தேன். "மிக்க மகிழ்ச்சி" என்றார். கருமை நிறங்கொண்ட குறுகிய தோற்றம் உள்ள இந்த மனிதர், பார்ப்பதற்கு மட்டுமல்ல; வாய்திறந்து பேசும்போது கேட்பதற்கும் பெரும் அச்சப்பாட்டை எவருக்கும் கொடுக்கும். ஏன் என்று நீங்கள் என்னைக் கேட்டால், தனித் தமிழ்தான் காரணம் என்று நான் கூறுவேன். இப் பெரியாருடன் நான் நட்புக் கொண்ட காலத்துள் இவரைப்பற்றி அறிந்து தெரிந்து கொள்ள எனக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.


சொற்பிறப்பியலைப் பற்றி அறிஞர் பேசிக்கொண்டிருந்தால், பெரு வியப்பையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். இன்னும் இக்கால உலக மொழிகள் அனைத்தும் தம்முள் குறுகித் திரிந்து குறைந்து, தமிழ் மொழிக்குள் ஓடி ஒழித்து நுழையும் காட்சியும் இவர் முன்னிலையில் பேசிக்கொண்டிருந்தபோது எனக்குத் தென்பட்டது. தொடக்ககால மனிதரின் உயிர், மெய், உயிர் மெய் ஒலி இசைப்புக்கள் இயல்பாகவே உள்ளடங்கிய மொழி தமிழ் மொழியென்றும், உயிர், மெய், உயிர்மெய்களின் உண்மைகள், பரமான்மா, சீவான் மாக்களின் பேருண்மைகளை விளக்கும் இறைத் தமிழாகப் பெயர் பெற்ற மொழி தமிழ் மொழியென்றும் பேரறிஞராகிய இவர் குறிப்பிடும்போது, கட + உள் = கடவுள் என்ற செந்தமிழின் ஆழ் கருத்தை யார் அறிவார்? என்று எண்ணி அமைதியாக இருந்தேன்.

இறைத் தமிழ்த் தொண்டே தனது இயற்கைத் தொண்டாக எண்ணி ஓய்வு ஒழிவில்லாது செயல்புரியும் மூதறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர், அனைத்துலகத் தனித் தமிழ் இயக்கக் கழகம் ஒன்றின் இயக்குநராகவும், தமிழ் நாட்டு அரசின் தமிழ்ப் பெரும் பணியாளராகவும் ஈடுபட்டு உழைக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# துரை சொன்ன கதை!

ஒரு சிறுமி தனது தாயுடன் ஒரு கோயிற் திருவிழாவிற்குச் சென்றாள்— எக்கச்சக்கமான திருவிழாச் சனக்கூட்டம் — வியாபாரிகளும் ஒருபுறம். விதம் விதமான வியாபாரிகள்— மிட்டாய், பலூன், பழவகைகள், விதம் விதமான விளையாட்டுச் சாமான்கள் இப்படிப்பலவிதம்—சிறுமியோ கோயிலுக்குப் போகும் வழியில் தனது தாயிடம் தான் கண்ட பொருட்களையெல்லாம் வாங்கித்தரும்படி ஒரே கரைச்சல் கொடுத்தாள்— மிட்டாய் வியாபாரியைக் கண்டவுடன் தனக்கு மிட்டாய் வேண்டும் என்று அழுதாள்; பழ வியாபாரியைக் கண்டவுடன் தனக்குப் பழங்கள் வேண்டும் என்று அடம் பிடித்தாள்! விளையாட்டுச் சாமான்களைக் கண்டவுடன் அவைதான் தனக்கு வேண்டுமென்று கூறி தாய்க்குச் சிரமம் கொடுத்தாள். ஆனால் தாயோ கோயிலுக்குப் போய் கடவுள் தரிசனம் செய்துவிட்டு திரும்பி வரும்போது எல்லாம் வாங்கித் தருகிறேன் என்று கூறித் தன் மகளைச் சமாதானப்படுத்த முயன்றாள்—



கோயில் அண்மித்தது— சரியான சன நெரிசல்— அந்த நெரிசலில் தாய் தன் மகளைத் தவற விட்டுவிட்டாள்— சிறுமியோ அழத் தொடங்கினாள்— அவளைச் சுற்றி ஒரு கூட்டம் சேர்ந்தது—கூட்டத்தில் உள்ளவர்கள் விபரம் கேட்கத் தொடங்கினர்— சிறுமிக்கோ விபரங்கள் கூறத் தெரியவில்லை— அவள் தொடர்ந்து அழுதாள்— நேரம் செல்லச் செல்ல அழுகை பலமானது— அவளைச் சுற்றிக் கூடியவர்கள் அவளைத் தேற்றும் முகமாக பழவகைகள் வாங்கிக் கொடுத்தார்கள்— அவள் அதை ஏற்க மறுத்து தொடர்ந்து அழுதாள்— ஒருவர் மிட்டாய் வாங்கிக் கொடுத்தார்—அவளோ, ''எனக்கு அம்மாதான் வேண்டும்'' என்று சொல்லிப் பலமாக 'ஓ' வென்று அழுதாள்—அவள் தனது தாயிடம் முன்பு கேட்ட பொருட்களைவிட பலவித பொருட்களை அங்கு கூடியிருந்தோர் தர விழைந்த போது அவள் அவற்றையெல்லாம் மறுத்து ஒதுக்கிவிட்டு, ''எனக்கு அம்மாதான் வேணும்'' என்று கூறி சத்தம் போட்டு அழுதாள்—

இன்று இந்தச் சிறுமியின் நிலையில் தான் தமிழ் மக்களாகிய நாமும் இருக்கிறோம்— பாதைகள், பாலங்கள், பாடசாலைகள், சலுகைகள், மொழி உரிமை போன்ற உரிமைகள் இவைகள் தேவையில்லையென்றோ வேண்டாமென்றோ சொல்லவில்லை—ஆனால் எமது சுயநிர்ணய உரிமை பறிபோய், நிலங்கள் பறிபோய் நாம் நாடற்றவராக, ஆளப்படும் அடிமை இனமாக மாற்றப்பட்ட பிறகு ''தமிழீழம்'' தான் வேண்டும் என்ற முடிந்த முடிவுக்கு வந்துவிட்டோம்—

அந்தச் சிறுமிக்கு எப்படி தாய் கிடைத்தால் அவள் விரும்பிய பொருட்கள் அனைத்தும் கிடைக்குமோ அதேபோற்தான் தமிழ் மக்களுக்கு தமிழீழம் கிடைத்தால் எல்லா உரிமைகளும் கிடைக்கும்! இது உறுதி!

இது பருத்தித்துறை முன்னாள் பா. உ. திரு. க. துரைரத்தினம் ஒரு கூட்டத்தில் கூறிய குட்டிக் கதையாகும். இது திரு. துரைரத்தினம் அவர்களுக்கு இப்போது நினைவில் இருக்கிறதோ என்னவோ, அதைக் கேட்ட எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது.

—இணுவையூர் 'இரகுபதி'

---


படியுங்கள் !


## லண்டன் முரசு

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும்
தமிழர்களின் ஒரேயொரு தமிழ் ஏடு !

விபரங்களுக்கு: லண்டன் முரசு
8. *Ashen Grove*
*London*
*S.W.* 19

# ஊமைகள்

இளவாலை-விஜயேந்திரன்



பொழுது புலர இன்னும் வெகு நேரமிருந்தது. ஊமை ராசு புரண்டு படுத்தான். ஊசியால் உடலைக் குத்துவது போன்ற உணர்வை மார்கழிக் குளிர் ஏற்படுத்திக்கொண்டிருந்தது. அவனது ஒரே ஆடை-ஆயிரம் கிழிசல் உள்ள வேட்டி-தன் உடலைக் குளிரிலிருந்து காப்பாற்றாது என்பது அவனுக்குத் தெரியும். அவன் தன் கரங்களால் முகத்தைத் தேய்த்துவிட்டான். அது அவனுக்குக் கொஞ்சம் இதமாக இருந்தது. தன் மடியில் இருந்த வெற்றிலைப் பையை எடுத்து விரித்தான். வெற்றிலை ஒன்றை எடுத்து அதை நரம்பு வழியாகப் பாதியாய்க் கிழித்துச் சில பாக்குச் சீவல்களையும் சேர்த்துத் தன் கொடுப்பிற்குள் வைத்துவிட்டு சிறு சுண்ணாம்புக் கட்டி ஒன்றை எடுத்து வாய்க்குள் போட்டான். அவனது பற்கள் கடுமையாய்ச் செயல்பட்டன.

'ப்ளிச், ப்ளிச்' தனிப் பொருளாய்க் கொள்ளப்பட்ட வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு என்பன ஒன்றாய்க் கலந்து வெளி வந்தன. தன் முதுகில் ஏதோ கடிப்பதை உணர்ந்தவன் முதுகைத் தூணிற் தேய்த்தான். அவனது தலைமயிர் காற்றின் தாளத்திற் கேற்ப ஆடியது. அவனுக்கு நித்திரை வருவது போல் இருந்தது. மென்காற்றின் அணைப்பில் சிறு பிள்ளை போல் தூங்கினான் ராசு.

ராசுவுக்கு நினைவு தெரிந்ததிலிருந்து அவன் யாருமில்லாத அனாதை. சிறு வயதில், அவ்வூர்க் கோயில்களில் ஒன்றான பிள்ளையார் கோவில் பூசாரியான கிட்டுஐயர் தன் கோயில் வேலை உதவிக்கு அவனை அமர்த்திக்கொண்டு சாப்பாடு போட்டார். ஊமையாயிருந்தாலும் நல்லவன், கள்ளம் கபடமற்றவன் என்பது கிட்டு ஐயருக்கு மட்டுமல்ல ஊரிற் பலருக்குத் தெரியும். காலம் சென்று ராசு வளர்ந்து பெரியவனானபின் கோயிலிற்றான் படுப்பான். கிட்டு ஐயர் வலிந்து அழைத்தாலும் அவரின் வீட்டுக்குச் செல்லமாட்டான். கோயிலில் ஐயர் தரும் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொடுப்பான். அதுமட்டுமன்றி ஐயரின் மன உளைச்சல்களைத் தீர்ப்பதற்கும் அவன் ஐயருக்கு உதவியாயிருந்தான். "இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? நான் செய்தது பிழையே?" என்பார் ஐயர். ராசு பதில் ஏதுமின்றி அவரை மௌனமாய்ப் பார்ப்பான். இந்த உலகத்தில் தன்னுடைய கவலைகளைக் கேட்க ஒரு உயிர் உண்டு எனும் திருப்தி ஐயருக்கு உண்டு.


* * *

தெய்வமே! பிள்ளையாரே! இவ்வளவு காலமும் நான் வேண்டின வேண்டுதல் ஒண்டுமே உன்ரை காதிலை விழேல்லை. நானும் ஒரு பெண் தானே! தாயாக வேணும் எண்டு எனக்கு ஆசையில்லையே? உன்ரை பேராலை எத்தினை வருஷம் தேருக்கு அடியளிச்சிருப்பன், எத்தினை அபிஷேகங்கள் செய்திருப்பன், எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக் கொண்டும் எத்தினை பூசைகள் கட்டுவிச்சிருப்பன். பிள்ளை இல்லையெண்ட குறை எனக்கு மட்டும் ஏன் வரவேணும்? அவரைக் காதலிச்ச காலம் தொடக்கம் ஒவ்வொரு நாளும் எத்தினை தரம் கும்பிட்டிருப்பன். எங்கடை காதலை முறிச்சிருந்தால் நான் அப்பவே செத்திருப்பன். அன்பாலை சேர்ந்த எங்களை ஒருத்தருமே பிரிக்க முடியாதபடி நானும் அவரும் வாழ்ந்த வாழ்க்கையை நினைச்சால் ஏதோ கனவுகண்டது போலையிருக்கு. இனி எனக்கு வாழ்க்கையுமில்லை. எதிர்காலமுமில்லை. ஒரு பெண் சாகேக்கை தாலியோடை சாகிறதுதான் மேன்மை. நான் தாலியோடை தான் சாவன். இவ்வளவு காலமும் எனக்கு வந்த கஷ்டங்கள்

எனக்குத்தான் தெரியும். மலடி யெண்டு ஊர் தூற்றியதும், ஏன், மாமியாரே பேசுறதும், கட்டின கணவனே வெறுப் பைக் கொட்டிக்கொண்டு நடக்கிறதும் என்னலை தாங் கேலாது. பிள்ளை பிறக்காமல் விட்டாலும் பரவாயில்லை. வளர்க்கவெண்டாலும் ஒரு பிள்ளையைத்தா எண்டு எவ்வ ளவு காலம் கேட்டிருப்பன். ஆனல் ஒரு பலனுமே இல்லாத தாலை நான் சாகத்தான் போறன். இனி நான் ஏன் பயப்பிடவேணும் என்ரை வாழ்க்கை இன்னும் கொஞ்ச நேரம்தான். பிள்ளையாரே! கடைசியாக உன்னை ஒண்டு கேக்கிறன், எனக்கு இந்தக் கடைசி நிமிசத்திலையாவது ஒரு பிள்ளையைத்தா.நான் வீட்டை போறன். நான் சாகக் கூடா தெண்டு நீ நினைச்சால் பிள்ளை ஒண்டை இந்தக் கடைசி நேரத்திலையாவது தர லாம். தராமலே விட்டாலும் பரவாயில்லை. எனக்கு வாழ்க் கையே சலிப்புத் தட்டிப் போட்டுது. கொஞ்ச நேரத் திலை கையிலை ஒரு விஷக் குப்பி யோடை நான் பிணமாய்க் கிடப்பன். இந்தக் கடைசி நேரத்திலை என்னை இனி ஆரும் தடுக்க முடியாது. குலதெய் வம் எண்டதாலைதான் உன் னட்டை வந்தனன். இனி எனக்கும் உனக்கும் இந்த உல கத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. பிள்ளை யாரே, நான் மறுபிறவி எடுத் தால் என்னைப் பெண்ணுகப் படைக்காமல் விடு. எனக்கு அந்த ஒரேயொரு உதவியை மட்டும் செய்தால் போதும். சரி நான் போறன். நான் போறன்.

ராசுவுக்கு ஏதோ கனவு கண்டு விழித்ததுபோல் இருந் தது. வாசற்பக்கம் பார்த் தான். ஒரு பெண்ணுருவம் செல்வதுபோல் தெரிந்தது. எழுந்து ஓடினன். வாயிற்கதவு பூட்டியிருந்ததால் அவனல் எதுவுமே செய்யமுடியாது போயிற்று. அவள் தற்கொலை செய்யப்போகிருள் என்ற ஒரு உணர்வு மனதில் எழுந்து அவனை ஆக்கிரமித்துக்கொண் டது. அவளைத் தடுக்க வேண்டு மென்ற எண்ணம் உடனே மனதில் தோன்றியது. "தங் கச்சி, தங்கச்சி" என்று இரு வார்த்தைகள் இதயத்தின் ஆழத்திலிருந்து புறப்பட்டுத் தொண்டைக்குள் சிக்கி வெளியே வரமுடியாது துடித் தன. அவனல் எதுவுமே செய்ய முடியவில்லை. வாயிற் கதவு பூட்டப்பட்டுக் கிடந்தது. அது ஐயர் வந்து திறக்கும் வரை அப்படியே இருக்கும் என்பது

---



ஆசிரியர்:- உன் தங்கை வீட்டுச் சாவியை விழுங்கிவிட்டாள் என்று வைத்துக் கொள்— அப்போது நீ என்ன செய்வாய்?

மாணவன்:- சுவரில் ஏறிச் சன்னல் வழியாக வீட் டுக்குள் போவேன்— இது தெரியாதா என்ன?

—கே. பி. நாயகம்,
கரணவாய் தெற்கு

---

அவனுக்குத் தெரிந்த கசப் பான உண்மை.

அவன் கண்களில் இருந்து நீர் தாரைதாரையாகக் கொட் டியது. அவளது தற்கொலை யைப் பற்றி முன்கூட்டியே தெரிந்துகொண்ட ஒரேயொரு மனிதனுகத் தான் இருந்தும் கூட அவளது உயிரைக் காப் பாற்ற முடியவில்லையே என்று மனம் புழுங்கியது.

அவனது கைகள் அனுபவத் தோடு வேகமாய் இயங்கின. சிறிது நேரத்தில் வெற்றிலை போட்டு முடித்துவிட்டுச் சிந்த னையில் ஆழ்ந்துகொள்ளஎடுத்த முயற்சி தோல்வியில் முடிந்து துயில் அவனை மிக மெதுவாய் ஆட்கொள்ளத் தொடங்கியது.

* * *

"தெரிந்தோ தெரியா மலோ வாழ்க்கையிலை வழுக்கி விழுந்த பெண்களை உலகம் ஏன் வெறுக்குது எண்டு தெரி யேல்லை; நான் படிச்சவள் தான். ஆனல் அந்தஸ்து, சாதி எல்லாம் எனக்குக் குறைவாம். அதையெல்லாம் கூடத் தெரிந்துகொண்டும் தேவன் என்னேடை பழகினபோது அவரை என்னலை தடுக்க முடி யேல்லை. நான் அவரை எவ்வ ளவு சொல்லித் தடுத்திருப் பன்." இந்தக் காலத்திலை உது கள் பாக்கிறது முழு விசர் வேலை" எண்டு சொல்லிச் சொல்லி என்னேடை அவர் பழகினதைப் பார்க்க ஒரு அப் பாவியைப்போல இருந்தது. அவர் என்னேடை ஒரு அப்பா வித்தனத்தோடை பழக எனக்கு அவரிலை ஒருவித பரிவு ஏற்பட்டு அது வளர்ந்து, வளர்ந்து ஒரேயடியாக என்னை வாட்டிவதைக்கும் எண்டு நான் நினைக்கேல்லை. நாள் செல்லச் செல்ல அவரை என்னட்டை இருந்து பிரிச்சால் என்னல் உயிர்வாழ முடியாது எண்ட நிலை வந்தது. அந்த நிலையிலை தான் ஒரு நாள் அது நடந்தது.

நான் அப்ப தனியாத்தான் இருந்தனன். ஆச்சி சந்தைக் குப் போட்டுது. தினசரி காய் கறி வித்து, மானத்தைவிக்காத ஒரு நிலையை ஆச்சி ஆக்கிக் கொண்டு வந்தா. அந்த நிலை மையை அண்டையோடை நான் முற்றும் மாற்றிப்போட் டன். அண்டைக்கு அந்த நேரம் நான் துளியும் எதிர் பார்க்காத ஒருத்தர்— தேவன் வந்தார். நான் ஒரு சொட் டுமே எதிர்பார்க்கேல்லை. என்ரை நெஞ்சும் உடம்பும் படபடக்கத் தொடங்கிச்சுது.

எது நடக்கக்கூடாது எண்டு நான் நினைச்சனோ அது நடந்திட்டுது.

"தவறுதலா ஒரு முறை நடந்திட்டம், நான் வாழ்ற வழியைச் சொல்லுங்கோவன் எண்டு அடுத்த நாள் அவரைக் கண்டபோது கேக்க 'பின்னேரம் வாறன்' எண்டு சொல்லிப்போட்டுப்போனதுதான். அவரின் அப்பா வேலை மாற்றலாகி எங்கையோ போகத் தேவனும் அவரோட போட்டார். அதுக்குப் பிறகு எனக்குப் பயமாக வந்தது.

ஆச்சியிட்டைச் சொன்னபோது வீட்டிலை ஒரே அமர்க்களம் போட்டுது. ரெண்டு நாளாச் சமையலும் இல்லை, சாப்பாடுமில்லை. 'இனியென்ன செய்யிறது நாங்கள் ஏழைகள் எண்டு சொல்லிப் போட்டு ஆச்சி என்னைப் பிறர் காணாமல் வளர்த்துது.' பிள்ளை பிறந்தாலும் அது அனாதையெண்டு சொல்லி வளர்ப்பம் எண்டு ஆச்சி சொன்னா. நான் ஒவ்வொரு நாளும் இரவிலே நித்திரையில்லாமல் இதைப்பற்றியோசிச்சு ஒரு முடிவுக்கு வந்தன். என்ர வயித்திலை பிறந்து அனாதையெண்டு வளர்க்கிறதிலும் பாக்க அது அனாதையாகவே போறதுமேல் எண்டு நினைச்சன். அந்த முடிவுதான் என்னை இண்டைக்கு உனக்கு முன்னாலை நிப்பாட்டியிருக்குது.



கடவுளே! நாங்கள் உந்தக் கோயிலுக்கு உள்ளேயும் வரக் கூடாது. நான் தாற பிள்ளையை உன்ரை பிள்ளையா நினைச்சு அதை ஆராவது வளர்க்கக்கூடிய ஆக்களிடம் ஒப்படைச்சுவிடு. 'உயர்ந்த' மனிசர்கள் இருக்கும்வரையும் எங்களைப்போலை பெம்பிளைகள் சாகவேண்டித்தானிருக்கும். என்னைப் பொறுத்தமட்டிலைதான் என்னுடைய உயிர் பெரிசு. ஆனா உலகத்திலை எத்தினையோ கோடியிலை ஒண்டுதானே. நான் சாகிறன். ஆனா இனிமேலாதல் என்னைப்போலை ஒருத்தரையும் சாக விடாதை. பிள்ளையாரே! என்னுடைய பிள்ளையைக் காப்பாற்றிப் போடு. இனி ஒண்டுமில்லை— கடவுளே நான் சாகப்போறன்."

* * *

ராசுவுக்கு எல்லாமே மிகத் துல்லியமாய்க் கேட்டன. ஆனால் இம்முறை அவன் வாசலை நோக்கி ஓடவில்லை. பதிலாக அவன் மனம் "ஊமை ஊமை" என்று தன்னைத்தானே திட்டிக்

# வல்லவனாகவும் வாழ்!

தம்பி! நீ வயதில் இளையவன் அஞ்சாமல் உன் கருத்தைச் சொல்கின்றாய்; எழுதுகின்றாய். நான் உன்னைவிட உலக அனுபவம் மிகுந்தவன்; அதனால் உலகத்தைப் பற்றிய அச்சமும் மிகுந்தவன் ஆகையால் எதையும் சொல்லவும் எழுதவும் தயங்குகின்றேன். நீ உள்ளத்தில் உணர்ந்ததைக் கொட்டுகின்றாய். நான் உணர்ச்சி இல்லாதவன் போல் நடிக்கிறேன் இது தான் வேறுபாடு. நீயே என்னைவிட ஒரு வகையில் நல்லவன்; நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது, வல்லவனாகவும் இருக்க வேண்டும். நன்மை, வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உள்ளவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கின்றார்கள்; மாய்ந்து வருகின்றார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரை இதற்கு சான்று காணலாம். தமிழ் நாட்டில் இருந்த பழைய நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காணவில்லையா? இவ் விதியை நாம் இனியும் மறந்து வாழக்கூடாது. தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும், குடும்பம் குடும்பமாகவும், நாடு நாடாகவும் அழிந்தது போதும், இனிமேல் வல்லவர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

தமிழ் மொழி நல்ல மொழிதான் ஆனால் அதை வல்ல மொழியாக்கினோமா? பெரும் பாலோர் போற்றும் மொழி ஆக்கினோமா? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்படவில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன் தம்பி.

வல்லமை இல்லாத நல்லதன்மை வாழாது தம்பி! அது பொருட்பால் இல்லாத திருக்குறள் போன்றதுதான்.

—டாக்டர் மு. வ.

---

கொண்டது. அவன் எழுந்து பிள்ளையாரின் முன் வந்தான்.

"கல்யாணம் செய்தும் பிள்ளையில்லை என்று ஒருத்தி, கல்யாணம் செய்யாமலே பிள்ளை பெற்றுவிட்ட ஒருத்தி-இருவருமே தற்கொலை செய்கின்றார்கள். முதல் பெண்ணுக்குக் குழந்தைப் பேற்றைக் கொடுத்து அவளைக் காப்பாற்றியிருக்கலாம். அவள் தற்கொலை செய்துகொண்டால் உலகம் ஏதேதோ கதைகட்டிவிடும். ஒன்றுமறியாத அப்பாவிப் பெண் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு உன்னால் தானே தள்ளப்பட்டிருக்கிறாள்.

இரண்டாவது பெண் மலடியாய் இருந்திருந்தால் அவள் சாகும்படி ஏற்பட்டிருக்காது. அநியாயமாய் இருவரும் சாகும்படி ஏற்பட்டுவிட்டது.

அதுதான் போகட்டும். சாகும் தறுவாயில் பிள்ளை பெற்ற பெண் முதலில் வந்திருந்தால் முதலாவது பெண் சாகாமல் குழந்தையை வளர்த்திருப்பாளே.

அதுவும் போகட்டும் என்னை வாய்பேசக் கூடியவனாய்ப் படைத்திருந்தால் அவர்களின் தற்கொலைகளைத் தடுத்திருப்பேனே.

வாய்பேசும் வரத்தைத் தராமல் விட்டாலும் கோயிற் கதவையாவது பூட்டாமலே விட்டிருக்கலாம். பூட்டாமல் விட்டிருந்தால் அவர்களை இழுத்துக் கொண்டுபோய் ஐயர் வீட்டிலே விட்டிருக்கலாம்.


ஒன்றுமேயில்லை. என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் நான் ஊமையாக இருந்ததால் இரண்டு உயிர்கள் செத்துவிட்டபோது உன்னைத் திட்டாமல் என்ன செய்வது?

அநியாயமாய் இரு உயிர்களும் போவது தெரிந்தும் தடுக்க முடியாமல் கவலைப்படுகிறேன். பிள்ளையாரே! ஏன் இந்தத் தற்கொலைகள் நிகழவும் தடுக்காமல் இருந்தாய்?"

நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு பல்லியின் ஒலி கேட்டது. தன் மன எண்ணங்களை வாயின் மூலம் வெளிக்கொணர முடியாது இருந்ததை மனம் எண்ணி வருந்தியது. "நான் வாய் திறந்து சொல்லாததால்தான் கடவுள் பதில் சொல்லவில்லையோ?" என்று மனதுள் எண்ணினான். ஆனால் "மன எண்ணங்களைப் புரிந்துகொள்ள முடியாதா இறைவனால்?" என்று மனதின் வேறொரு மூலை பதில் சொல்லிற்று.

"அப்படியானால்... ஏன் என் கேள்விக்குக் கடவுள் பதில் சொல்லவில்லை? ஒரு வேளை இறைவனும் என்னைப்போல் ஊமையோ?" என்று அவன் மனம் கேட்டது. அதை மற்றவர்களிடம் கேட்கவும் முடியவில்லை. ஏனென்றால் அவன் ஊமை. அவனது கருத்துப்படி இறைவன் ஊமையாய்த்தான் இருக்கவேண்டும். அதையும் அவன் மற்றவர்களிடம் சொல்லமுடியாது. ஏனென்றால் அவன்... ஊமை.

(யாவும் கற்பனை)




அமைச்சரே!

அரண்மனை மந்திராலோசனை மண்டபம் அதிர்ந்தது! அமைதியாக அயர்ந்திருந்த அமைச்சர் குழாம் கலவரத்துடன் மன்னன் முகத்தை ஏறிட்டு நோக்கியது.

அமைச்சரே! மன்னன் கிள்ளிவளவனது குரல் கரகரத்தது. எல்லை கடந்த கோபத்தில் இருக்கிறான் என்பதை அவன் முகம் எடுத்துக் காட்டியது.

முதலமைச்சர் அமைதியாக இருக்கைவிட்டெழுந்து மன்னன் கிள்ளிவளவனது உத்தரவை எதிர்பார்த்து நின்றார்.

'அமைச்சரே! திருக்கோவலூரில் சிறைப்பிடித்து வந்தோமே அந்தச் சிறுவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

'வேந்தே! அவர்கள் மிகுந்த பாதுகாப்புடன் எமது சிறைக் கோட்டத்தில் இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்ய......

'நிறுத்தும் அமைச்சரே! அவர்களை விடுதலை செய்வதற்காக நான் இங்கே இழுத்து வரவில்லை! அவர்களது தந்தை இருந்தானே மலையமான் திருமுடிக்காரி; அவன் எனக்குச் செய்த அவமானத்திற்கு இவர்களைச் சித்திரவதை செய்யப் போகிறேன்! யானையின் கால்களால் இடறச்செய்து அக்காட்சியை என் கண்களினால் பார்க்கப் போகிறேன்! இதை ஒரு விழாவாகவே கொண்டாடப் போகிறேன்!

கிள்ளிவளவனின் தேகம் ஆடியது. அவனது மீசை துடித்தது: கண்களில் கொலை வெறி தாண்டவமாடியது.

அமைச்சர் அமைதியாகக் கூறினார்.

'மன்னவா! என்ன இருந்தாலும் தந்தை செய்த தவறுக்காகப் புதல்வர்களைத் தண்டிக்கலாமா? வேடிக்கை பார்க்கும் இளம் பருவத்தினர்களாகிய அச்சிறுவர்களை காராகிரகத்தில் அடைத்து வைப்பதும் அவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதும்......'

'தவறு என்றுதானே சொல்ல வருகிறீர் அமைச்சரே! திரிமுடிக்காரி என் கட்டளையை ஏற்க மறுத்தான்; அடிபணிய மறுத்தான்; எல்லாவற்றுக்கும் மேலாக என்னோடு போரிட விரும்பினான்; பெருஞ் சேர லிரும்பொறை தனக்கு படைபலம் அளிப்பான் என்ற தைரியத்தில் வீரம் பேசினான். ஈற்றில் அழிந்தொழிந்தான். அவனது சந்ததியே இவ்வுலகத்தில் வாழக் கூடாது; பெருகக் கூடாது இதுதான் எனது விருப்பம்!

'வேந்தே! திரிமுடிக்காரி புரிந்தது தவறுதான்; அதற்காக இந்தப் பச்சிளம் பாலர்களைப் பழிவாங்குவதுதான்......'

'அமைச்சரே' ஆரியர் பெரும் படையுடன் தமிழ்நாடு புகுந்து திரிமுடிக்காரியின் திருக்கோவிலூரை முற்றுகை இட்டபோது உதவிக்கு எம்மையும் அழைக்காமல் எம்மை அவமதித்துத் தானே வடவர்களுடன் சமர் புரிந்து அவர்களை விரட்டினான். அதிர்ஷ்டதேவதை காரியின் பக்கம் இருந்ததால் அவன் வெற்றிபெற்றான். இவ்வெற்றி அவனைப் போதை கொள்ளச் செய்துவிட்டது. எவரையும் மதிக்காகதற்பெருமை அவனை ஆட்கொண்டுவிட்டது. இதனால் தகடூர் அதியமானெடுமானஞ்சியின் பகைக்கு வழிவகுத்தான். திருக்கோவலூரைப் பறிகொடுத்துவிட்டு கணைக்காலிரும்பொறையின் பாதங்களில் வீழ்ந்தான். கணைக்காலிரும்பொறையின் குறிப்பறிந்து கொல்லிமலையை ஆண்ட வல்வில்லோரியைப் போரில் சந்தித்து அவனைக் கொன்றான். இதற்குப் பரிசாக கணைக்காலிரும் பொறை திருக்கோவிலூரை காரிக்கு மீட்டுக் கொடுத்தான். எம்மை அவன் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாடவும் இல்லை; உதவி கேட்கவுமில்லை; எம்மை ஒரு பொருட்டாக மதிக்கவுமில்லை. இப்படிப்பட்ட தலைக்கனம் பிடித்தவனை —அற்பனைப் போரில் கொன்றதோடு மட்டும் என் சினம் அடங்கவில்லை. அவனது எச்சங்கள் கூட இப்புவியில் தங்கக் கூடாது! இதுதான் எனது குறிக்கோள்!


உணர்ச்சியுடனும் வேகமாகவும் பேசிவிட்டதால் கிள்ளிவளவனது முகம் விகாரமடைந்தது. நெஞ்சு விம்மிதணிந்தது.

அமைச்சர் சிறிதுநேரம் மௌனமாக நின்ருர். பின்னர் மெல்லத் தன் இருக்கையில் அமர்ந்தார்.

'அமைச்சரே! கிள்ளிவளவனது குரல் குரூரமாக ஒலித்தது. அமர்ந்த அமைச்சர் எழுந்தார்.

'அமைச்சரே! நாளையத் தினமே திரிமுடிக்காரியின் அருமந்த புத்திரர்களுக்குரிய தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். நாளோலக்க மண்டபத்தின் முன்ஞல் உள்ள திறந்த வெளியில் நாட்டு மக்கள் முன்னிலையில் இத்தண்டனையை நிறைவேற்றுவதையே நான் விரும்புகிறேன். எனவே, இச்செய்தியை முரசறைந்து நாட்டு மக்களுக்குத் தெரிவித்துவிட வேண்டும். நமது யானைப்படையில் மிக வலிமையுடைய இரு யானைகளினுல் தண்டனையை நிறைவேற்ற வேண்டும்!

இரத்தத்தையே உறையவைக்கும் கிள்ளிவளவனது கொடுமையான கட்டளைகளைக்கேட்டு அமைச்சர் சிலையானர்.



கிள்ளிவளவன் அரியாசனத்தில் இருந்து எழுந்தான். அமைச்சர்களும் எழுந்தார்கள். தலைமை அமைச்சரை ஒருமுறை நோக்கிவிட்டு மன்னவன் மண்டபத்தைவிட்டு ஏகினுன்.

அமைச்சர்கள் தலைகுனிந்தவாறே மண்டபத்தைவிட்டு மெல்ல அகன்றனர்.

சூரியோதயமாகி இரு நாழிகை ஆவதற்குள்ளாகவே நாட்டு மக்கள் நாளோலக்க மண்டப முன்றிலில் கூட ஆரம்பித்து விட்டனர். நடக்கப்போகும் குரூரச் செயலைப் பார்ப்பதற்காக மன்னவனுக்கு ஒரு மேடை மண்டப முன்றிலில் அமைக்கப்பட்டிருந்தது.

நாழிகை ஆக ஆக மக்கள் கூட்டம் வெள்ளம்போலப் பெருக ஆரம்பித்தது. முரசு ஒலித்துக்கொண்டிருந்தது. படைவீரர்கள் ஆங்காங்கே நின்று மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர்.

குன்றம் போன்ற இரு பெரிய மதயானைகள் மண்டப முன்றிலுக்குக் கொண்டுவரப்பட்டன. அவற்றின் பிளிறல் ஒலி கேட்போரை நடுங்கவைத்தது.

சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் தவமும் பருவம் கடந்து நடக்கும் பருவத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் திரிமுடிக்காரியின் இரு புதல்வர்களும் நாளோலக்க மண்டப முன்றிலிற்கு அழைத்து வரப்பட்டனர். குழந்தைகள் யானைகளைக் கண்டதும் அவற்றை வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டனர். மக்கள் வெள்ளத்தைக்கண்டு மலரமலர விழித்தனர்.

மன்னவன் வருவதை உணர்த்துவதைப்போல முரசங்கள் பலமாக ஒலித்தன. கொம்புகள் முழங்கின. ஆம்! அரசாங்க ஆடம்பரங்களுடன் மன்னனும் மேடைக்குவந்து அமர்ந்து விட்டான்.

இனிமேல் நடக்கப்போகும் கொடுமையான காட்சியைக் காணச் சகியாதவனைப்போல பகலவன் மேகத்திரைக்குள் மறைந்துவிட்டான்!

## ( 3 )

'என்ன அப்பா! அங்கே கூட்டம்? எதற்காக மக்கள் நாளோலக்க மண்டபத்தை நோக்கிச் செல்கிருர்கள்? வீடுகளெல்லாம் வெறிச்சோடிக் கிடக்கிறதே!

'நீர் ஊருக்குப் புதியவர் போல இருக்கிறது. உமக்கு விஷயம் தெரியாதா? சிறைப் பிடித்த திரிமுடிக்காரியின் இரு புதல்வர்களுக்கு இன்று தண்

டனே நிறைவேற்றப்படப் போகிறது. யானையின் கால்களி ஞல் அச்சிறுவர்களை மிதிக்கச் செய்து தண்டனையை நிறை வேற்றப் போகிருர்கள். இந்த வேடிக்கையைப் பார்ப்பதற் குத்தான் மக்கள் நாளோலக்க மண்டபத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிருர்கள்!

'கொலை கலையாகிறதா இங்கே? நல்ல மன்னவன் நல்ல மக்கள்!'

'யாரையா நீர் பைத்தியம் போலப் பிதற்றுகிறீர்? நீர் எங்கிருந்து வருகிறீர்? உமது பெயரென்னவோ?'

'என்னைக் கோவூர்கிழார் என அழைப்பர்' ஏனைய விபரங்களை நீர் அறிந்து கொள்வதனல் ஆவது ஒன்றுமில்லை. நான் வருகிறேன்.

'யாரது கோவூர் கிழாரா? வருக வருக, நீங்கள் இங்கே நடைபெறப்போகும் காட் சியை எங்கே பார்க்காமல் இருந்துவிடப் போகிறீர்களோ என்று ஏங்கிக்கொண்டிருந் தேன். நல்ல சமயத்தில் வந் திருக்கிறீர்கள்!' என்று மொழிந்தவாறே மேடையி லிருந்து இறங்கிவந்து வரவேற் ருன் மன்னவன் கிள்ளிவளவன்.

'மன்னவனே! என்னை வர வேற்பது இருக்கட்டும் நீ புரி யப்போகும் தண்டனையின் பாதிப்பை; அது உன் குலத்தின் பெருமையை சிதைக்கப் போகும் தன்மையை நீ எப் போதாவது சிந்தித்ததுண்டா? உனது கொலை வெறிக்கும் வஞ் சகத்திற்கும் இந்தப் பிஞ்சுகள் தாஞ அகப்பட்டார்கள்?'

உணர்ச்சியால் உந்தப்பெற்ற கோவூர் கிழாரின் வாயிலிருந்து படபடப்புடன் வார்த்தைகள் வெளியேறின;

'புலவரே! நான் என்ன தவறு செய்தேன்? என்னை அவமதித்த எனது எதிரியின் வாரிசுகளைத் தானே கொல்லப்போகிறேன். அரச பரம்பரைக்கு இது ஒன் றும் புதியது அல்லவே!'

'மன்னவனே! உனது எதிரி யைக் கொன்ருய்; ஏற்றுக் கொள்ளுகிறேன். கொல்லப் போகும் வேழத்தை வேடிக்கை பார்க்கும் இப் பச்சைக் குழந் தைகள் உனக்கு என்ன தவறு புரிந்தார்கள்? இவர்கள் உனக்கு ஏற்ற எதிரிகளா? இவர் களுடைய தலையைக் கிள்ளி எறிந்தால் உன்னை உன் பரம் பரை எள்ளி நகைக்கும்! உன்னை எதிர்காலம் குழந்தைகள் தலை யைக் கிள்ளியவளவன் என அழைக்குமேயல்லாது கிள்ளி வளவன் என அழைக்காது; இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்!'

'புலவரே...! மன்னவன் மெல்ல வாய்திறந்தான்.

'மன்னவனே! நீ என்ன சொல்லப் போகிருயென்பது எனக்குத் தெரியும். உள்ளத் தில் ஊறியிருக்கும் வஞ்சம் தீர்க்கும் வெறியைச் சரியென வாதாட இது ஏற்ற தருண மல்ல. ஒரு புருவுக்காக தன்னு யிரையே ஈய முற்பட்டவன் உனது பரம்பரையில் வந்த சிபிச்சக்கரவர்த்தி. ஆனல் நீ இளந்தளிர்களை கசக்கி எறிந்து துவம்சம் செய்ய முற்படுகிருய்! கொலையைக் கலையாக விழா வாகக் கொண்டாடும் ஒரு மன் னவனை இப்பொழுதுதான் முதன் முதலில் சந்திக்கிறேன்! உன் எதிரில் நிற்கும் இக்குழந் தைகளும் வள்ளல் மரபில் வந் தவர்களே; புலவர்களின் வறு மைத் துன்பத்தைக் காணச் சகியாது அள்ளியள்ளிக் கொடுத்த வள்ளன்மை மிக்க வர்கள் இவர்களின் மூதாதை யோர்!

'புலவரே! நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?' வெறியடங்கி உளந்தெளிந்து தீனமாக ஒலித்தது கிள்ளிவள வனின் குரல்.

'மன்னவனே! என்ன செய்ய வேண்டுமென்று என்னையா கேட்கிருய்? அதிகாரம், படை பலம் எல்லாம் பெற்றிருக்கும் நீ நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிருய்; விரும்பியவாறு செய்யலாம்; உன்னிலும் பார்க்க வயதில் முதிர்ந்தவன்; பல வருடங்கள் பழகியவன்; என்ற எண்ணத் தில் நீ தவறிழைக்கும்போது அதனலேற்படும் பலாபலன் களை எடுத்தோத வேண்டியது என்னுடைய கடமை, உரிமை. நான் சொல்லவேண்டியவற் றைச் சொல்லியாகிவிட்டது. கேட்பதும் கேளாமல் விடு வதும் உன் உரிமை. நான் வரு கிறேன்!

'புலவர் பெருமானே செல் லாதீர்கள் நில்லுங்கள்! என் அகக் கண்களைத் திறந்த கோவூர் கிழாரே! திரிமுடிக் காரியின் குழந்தைகள் இனி என் குழந்தைகள்! அவர்கள் என் அரண்மனையிலே வளரட் டும். உரிய பருவம் அடைந்த தும். அவர்களது அரசை அவர் களிடமே ஒப்படைத்துவிடப் போகிறேன். என் முடிவு சரி தானே புலவரே!

'கிள்ளிவளவன் வாழ்க! அவன் செங்கோல் நீடூழி வாழ்க! உன் முடிவை எதிர்காலம் பாராட் டும்!

குறிப்பு:

இவ் இலக்கியக் கதை புறநா னூறு நாற்பத்தாறும் பாட லைத் துணையாகவும், சரித்திரக் குறிப்புக்களை ஆதாரமாகவும் கொண்டு எழுதப்பட்டது.

பாடல் வருமாறு:

நீயே புறவின் அல்லல்
அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும்
விடுத்தோன் மருகனை
இவரே புலனுழுதுண்
மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத்துண்ணும்
தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉம்
அழால் மறந்த
புன்றலைச் சிருர் மன்று
மருண்டுநோக்கி
விருந்திற் புன்கண்
நோவுடையர்
கேட்டனையாயின் நீ
வேட்டது செய்ம்மே.

—கோவூர் கிழார்

# 'கல்கி' கண்ட தமிழ் மாநாடு



முதலில் கூறிய 'செவிடர்கள்' கதையைப் பேராசிரியர் அருள்நந்தி கூறிச் சபையோரைக் குலுங்கச் சிரிக்கவைக்கவைத்துக் கொண்டிருந்தபோது முதல்நாள் தமிழ்த் திருவிழாவில் நடந்த ஒரு சம்பவம் என் உள்மனதிலிருந்து வெளியே வந்தது. திருவிழாவின் தலைவர் திரு. ஸி. ஆர். சீனிவாசன் தமது தலைமைப் பிரசங்கத்தைப் படிக்கத் தொடங்கியபோது, திருவிழாப்பந்தலிலும் சுற்றுப் பக்கத்திலும், கூடியிருந்த பதினையாயிரம் ஜனங்களும் திடீரென்று செவிடர்களாகிவிட்டார்கள்! அதாவது ஒலிபெருக்கி வேலைசெய்யாமல் நின்றுவிட்டது! அந்தச் சமயம் பார்த்து, யாரோ மின்சார நிலையத்தில் மின்சாரப் பரிசோதனை செய்ய ஆரம்பிக்கவே இந்தக் கோளாறு நிகழ்ந்தது.

அப்போது உச்சிப் பகல்வேளை. மணி பன்னிரெண்டுக்குமேல் ஆகிவிட்டது. அந்த வேளையில் வேறு இடங்களில் இம்மாதிரிக் கூட்டங்களில் என்ன நடக்குமென்பதுபற்றி நேயர்கள் தங்கள் அனுபவங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். 'ஒலிபெருக்கி கேட்கவில்லை.' என்று நாலாபுறத்திலிருந்து கூச்சல் கிளம்பும். பலர் எழுந்து நின்று அந்த விஷயத்தை அறிவிப்பார்கள். அவர்களைச் சிலர் தடுக்கப்பார்ப்பார்கள். பத்து நிமிஷம் அல்லோல கல்லோலமாயிருக்கும். இதற்குள் ஒலிபெருக்கி திரும்பி வராவிட்டால், கூட்டம் நிச்சயமாகக் கலைந்து போகும். மேடையில் உள்ள சிலர் மட்டும் மரியாதைக்கு உட்கார்ந்திருப்பார்கள். பிரசங்கம் செய்பவரும் நடுநடுவே நிறுத்திவிட்டு அங்குமிங்கும் பார்ப்பார். 'பிரசங்கத்தைப் படித்ததாகப் பாவித்துக் கொள்ளலாம்.' என்று அவரும் பேச்சை நிறுத்திவிடுவார். சபையில் மிச்சமுள்ள மரியாதைக் காரர்கள் பெருமூச்சு விட்டுவிட்டு எழுந்து போவார்கள்.

யாழ்ப்பாணத் திருவிழாவில் என்ன நடந்தது என்று கேளுங்கள். ஒலிபெருக்கி நின்றதும், திரு. ஸி. ஆர். சீனிவாசன். ஒரே ஒரு தடவை திரும்பிப் பார்த்தார். சிலோன் ரேடியோ அதிகாரி 'இதை நேரடியாக ஒலி பரப்புகிறோம்; ஆகையால் தயவுசெய்து நிறுத்தாமல் படியுங்கள்; என்றார். ஸ்ரீ சீனிவாசன் பிறகு நிறுத்தவுமில்லை, திரும்பி அப்பால் பார்க்கவுமில்லை. அவர் பாட்டுக்குப் படித்துக் கொண்டே போனார். மெதுவாக நிறுத்தி நிதானமாகப் படித்தார். படித்துமுடிக்க அரைமணி நேரமாயிற்று. முடிக்கும் வரையில் ஒலிபெருக்கிவேலை செய்யவில்லை. ஆனால் ஒருவராவது சபையைவிட்டு எழுந்திருக்கவில்லை; கூச்சல் போடவில்லை. திரு.ஸி.ஆர். சீனிவாசன் தலைமைப் பிரசங்கம் முடிந்து, கல்விமந்திரி கனம் கனகரத்தினத்தின் நன்றியுரைக்கும் இருந்துவிட்டுத்தான் எழுந்தார்கள்!

தமிழ் விழாக்கள் கம்பன் விழாக்கள் முதலிய வைபவங்களுக்குத் தவறாமல் பிரசன்னமாகும் நண்பர்கள் சிலர் உண்டு. விழா நடைபெறும்போதும், விழா முடிந்து போகும் போதும் அவர்களுடைய சம்பாஷணை பின்வரும் தோரணையில் இருக்கும்:—

"திருவாரூர் தமிழ்விழாவில் இலைக்கு மாம்பழம் போட்டார்கள். காரைக்குடி கம்பர் விழாவில் பலாச்சுளை போட்டார்கள். இந்த விழாவில் இலையில் பழம் ஒன்றுபோடவில்லை..."

"இந்த ஊரில் பழம் கிடைக்காது; போனால் போகட்டும். தென்னை அதிகம் இருக்கிறதே, தலைக்கு ஒரு இளநீராவது கொடுக்கக் கூடாதோ?"

"நீங்கள் பழத்துக்கும் இளநீருக்கும் போய் விட்டீர்கள். சமையலே மகா மட்டம். சாம்பார், ரஸம், பாயாசம் — ஏதாவது ஒன்று நன்றாயிருக்கவேண்டுமே? வாயில் வைக்க முடியவில்லை?

"அப்படி ஒரேயடியாகக் குறை சொல்லி விடாதீர்கள். வாழைக்காய்ப் பொடித்துவையல் நன்றாகத்தானிருந்தது. இவ்வளவு பேருக்கும் மாங்காய் ஊறுகாய் வைத்திருந்து போட்டார்களே? அதைச் சொல்ல வேண்டாமா?..."

# பெரியவரின் பெருமை!



தந்தை செல்வாவின் பெருமைக்கு ஒரு காரணம் அவர் மேலதிகம் கதைக்காததுமாகும். தேவையானபோது, தேவையான அளவு, தேவையானதைக் கதைப்பார். அதை ஆறுதலாக, கேட்போர் மனத்தில் செல்லத்தக்கவாறு, சொல்லுவார். அதில் ஆத்திரமிராது. ஆனால் உறுதிப்பாடு இருக்கும். தந்தை செல்வாவின் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடிராது. செய்யப்போவதை அவர் சொல்லி வந்ததால் அவரது சொற்களை வெறும் வார்த்தைகளாயல்லாது செயலாகக் கருதி மக்கள் கேட்டனர். தந்தை செல்வா உரையாடும்போதும் சரி, கூட்டத்திற் பேசும்போது சரி. அவரை மக்கள் அன்போடு பார்த்தார்கள், ஆவலோடு கேட்டார்கள். காரணம் அது தமிழினத்தின் நிலையாக. செயலாக, வருங்காலமாக இருக்கும்

—நாக. பத்மநாதன்

"சாப்பாடு முன்பின்னாக இருந்தாலும் கவனிப்பு நன்றாயிருந்தால் போதும், அதுவும் இங்கே இல்லை. கவனிப்பு, உபசரிப்பு ஒன்றுமே போதாது. விசேஷ பிரதிநிதிகளுக்கு சாப்பாடு எங்கே என்று நாம் விசாரித்துக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. நம்முடைய புலவர் பெருமணி காளமேகக் கவிராயரைத் தெரியும் அல்லவா? அவருக்குப் பிற்பகலில் சொற்பொழிவு இருந்தும், பகல் பன்னிரெண்டு மணி வரையில் சாப்பாடு வரவில்லை! தமிழ் விழாவாம் தமிழ்விழா! இம்மாதிரி யார் விழாக் கொண்டாடச் சொன்னார்கள்! என்று கவிராயர் அலுத்துக்கொண்டு விட்டார். நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்! அடுத்த ஆண்டு விழாவுக்கு அவர் வரமாட்டார்...!"

பேராசிரியர் அருள்நந்தி சொன்ன செவிடர் கதையைப்போல் இம்மாதிரி நண்பர்களின் உள்மனதில் உணவைப்பற்றிய கவலையே ததும்பிக்கொண்டிருக்கிறது. செவிக்குணவின் மகிமையைப் பற்றிய குறள் முதலிய எல்லாம் இவர்கள் வரைக்கும் செவிடர் காதில் ஊதிய சங்கைப் போலத்தான்! ஆகையால் சம்பாஷணை மேற்கண்டவாறு அமைகிறது.

யாழ்ப்பாணத்து தமிழ்விழாவின் அனுபவம் இதற்கு நேர்மாறாக இருந்தது. உச்சி வேளை பன்னிரெண்டரை மணிக்கு, தலைவர் சொற்பொழிவு ஒரு வார்த்தைகூடக் காதில் விழாமல் ஒலிபெருக்கி தவறியிருந்தும், அந்தப் பதினையாயிரம் பேரும் அப்படியே அமைதியாக உட்கார்ந்திருந்தது அதிசயத்திலும் அதிசயமான நிகழ்ச்சியாகும். இது எப்படிச் சாத்தியமாயிற்று? அவ்வளவு பேருடைய உள்மனதிலும் தமிழ்த் தெய்வத்தினிடம் அளவில்லாத ஆழ்ந்த பக்தி குடிகொண்டிருக்கவேண்டும்! அந்த உறுதியான பக்திதான் அவர்களை அப்படி நிலைத்து உட்காரச் செய்திருந்தது. வயிற்றுக்குணவைப் பற்றிய நினைவுகூட அவர்களை கலைந்துபோகச் செய்யவில்லை! "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்னும் மொழியும் அங்கே பொய்யாயிற்று. பசியினால் தமிழ் பக்தியை வெல்ல முடியவில்லை. இந்தப் பக்தி மனப்பான்மை, விழா நடந்த மூன்று தினங்களிலும் நன்கு வெளியாகிக் கொண்டிருந்தது.

காலையில் பதினையாயிரமாக இருந்த சபை அன்று மாலை இருபதினாயிரம் ஆயிற்று. மறுநாள் முப்பதினாயிரம் ஆயிற்று. மூன்றாம் நாள் மாலை ஏழு மணிக்கு சபையில் அறுபதினாயிரம் மக்கள் கூடியிருந்தார்கள். அவர்களில் பலர் பிற்பகல் மூன்று மணிக்கு வந்து சபையில் உட்கார்ந்தவர்கள். பூமியில் வேர் ஊன்றியவர்களைப்போல் இரவு பதினொரு மணி வரையில் உட்கார்ந்திருந்தார்கள். எவ்வளவுதான் சொற்பொழிவுகள் நன்றாயிருக்கட்டுமே? சங்கீதம் கேட்பதில் ஆசையாயிருக்கட்டுமே? உள்மனதில் பக்திவேர் ஊன்றியிராவிட்டால்,இது நடக்கக்கூடிய காரியமா?

"அறுபதினாயிரம் பேர் என்று சொல்கிறீரே? எண்ணிப் பார்த்தீரா?" என்று கேட்கலாம். ஒருமுறையாக எண்ணித்தான் பார்த்தேன். ஐயாயிரம்பேர் தாராளமாக உட்காருவதற்கு இடம் கணக்கிட்டுப் பந்தல் போட்டிருந்தார்கள்; நெருக்கமாக உட்கார்ந்தால் ஆறாயிரம்பேர் கட்டாயம் உட்காரலாம்; பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் ஒரு சிறு பகுதியைத்தான் பந்தல் அடைத்தது. மூன்றாம் நாள் மாலை சுமார் ஏழு மணிக்கு மேடையில் நின்று பார்த்தேன். அந்த மைதானம்

# தமிழனின் குறை!

தமிழர்களிற்கு நல்ல பண்புகள் பல உண்டு. தமிழரின் வாழ்வு நலிந்துள்ளது எனக் கூறலாம். காரணம் என்ன? தமிழரிடையே சில குறையேனும் இருத்தல் கூடுமன்றோ? "தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காணல்" திருவள்ளுவர் நெறி நம் குற்றங் குறைகளை நாமே உணர்தல் நலம். "குற்றம் உணர்வான் குணவான்" என்பது தன் மொழி. இன்றைய சூழ்நிலையில் இதனைப் படித்தால் பயன் உண்டாகலாம்.

—டாக்டர் மு. வரதராசன்

---

முழுவதும், — மோட்டார் வண்டிகள் நிறுத்தியிருந்த இடத்தைத் தவிர,—ஒரே ஜனத்திரள் மயமாகத் தெரிந்தது! பந்தலில் இருந்த கூட்டத்தைப் போல் பத்து மடங்கு அதிகம் இருக்கும்.

இதேமுறையில் கணக்கிட்டு,அச்சபையில் அப்போது பெண்மணிகள் எத்தனை பேர் இருந்தார்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடிந்தது. பந்தலுக்குள்ளே ஆயிரம் பேரும் வெளியே ஒன்பதினாயிரம் பேரும இருந்தார்கள். இதிலும் அதிசயம் என்னவென்றால், அத்தகைய மாதர் பெருங் கூட்டத்தில் கைக் குழந்தைகளைக் காணோம். பிரசங்கத்துக்கோ கச்சேரிக்கோ தாய்மார் போனால் குழந்தைகளைக் கட்டாயம் எடுத்துப்போக வேண்டாமோ! இது யாழ்ப்பாணத் தாய்மாருக்கு தெரியவில்லை.


மாலை ஆறுமணி சுமாருக்கு ஒரேஒரு குழந்தையின் கீச்சிடும் குரல் மெல்லியதாகக் கேட்டது. எந்தப்பக்கமிருந்து வருகிறது என்று எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அந்தக் குழந்தையின் அன்னையே அதை வெளிப்படுத்திவிட்டார். அவர் என்ன செய்தார் தெரியுமோ? அழுத குழந்தையை அணைத்துக்கொண்டு எழுந்தார்.ஏதோ செய்யத்தகாத பெருங் குற்றத்தைச் செய்துவிட்டவர்போல் ஒரே ஓட்டம் பிடித்து ஓடிவிட்டார்! அந்தப் பெண்மணியின் முன்னால் சென்று நமஸ்கரித்து, "அம்மா தங்கள் குழந்தையின் குரல் தமிழைவிட இனிமையாக இருக்கிறது. போகவேண்டாம், இருங்கள்!" என்று பிரார்த்தித்து கேட்டுக்கொள்ள எண்ணினேன். அதற்குள் அந்தப் பெண்மணி மாயமாய் மறைந்துவிட்டார்.

இவ்வளவு பண்பாடு நிறைந்த பெருந்திரளான மக்கள் கூடியிருந்த ஒரு மகா சபையை இதற்குமுன் எங்கும் நான் பார்த்ததில்லை. வேறு யாரும் பார்த்திருக்க முடியாது. என்றும் சொல்வேன் யாழ்ப்பாணத்தார் நிச்சயமாகப் பார்த்ததில்லை. இதற்கு முன்பும் பார்த்ததில்லை. இனிமேலும் பார்ப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை" என்று ஈழத்து நண்பர்கள் பலரும் சொன்னார்கள்.

இவ்வளவு உயர்ந்த பண்பாட்டுக்கு இழுக்குத்தரும் குறைபாடு, ஒன்றும் தமிழ்விழாவின் போது வெளியாயிற்று. அதை நான் சொல்லாமலிருக்க முடியாது. சொற்பொழிவாளர்களில் ஈழநாட்டைச் சேர்ந்த பெரும் புலவர்கள் பேசிய சமயங்களில் சபையில் ஒரு பகுதியார் பொறுமையின்மையை வெளிப்படுத்தினார்கள்; கைதட்டிப் பேச்சை நிறுத்தும் முறையையும் கையாண்டார்கள். அவர்களுடைய மனோநிலையை அறிந்து கொள்வதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. "இந்நாட்டுப் புலவர்களின் பேச்சுக்களை நாம் எப்போதும் கேட்கலாம். இவர்கள் தங்கள் பேச்சுக்களை நீட்டிக் கொண்டே போனால் கடல்கடந்து எவ்வளவோ சிரமத்தின் பேரில் வந்திருப்போரின் சொற்பொழிவுகளை எவ்வாறு கேட்பது?" என்று அவர்கள் எண்ணியது இயல்புதான். அதை அந்தமாதிரி பண்பாட்டுக் குறைவான முறையில் வெளியிட்டிருக்கக்கூடாது. அந்தக் கடமையைச் சபைத்தலைவருக்கே விட்டிருக்கவேண்டும். எப்படியானாலும், சபையில் அடிக்கடி ஒரு பகுதியார் இம்முறையைக் கையாண்டது தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்தவர்களுக்கு வேதனையை அளித்தது.

பேராசிரியர் அருள்நந்தி ஒருவர்தான் மேற்கூறிய சோதனையிலிருந்து தப்பினார். அவர் ரஸமாகவும் பேசினார், சுருக்கமாகவும் பேசிமுடித்தார். உளத்தத்துவ ஆசிரியர் அல்லவா? சபையோரின் வெளிமனம், உள்மனம் ஆகிய இரண்டின் தன்மையையும் அறிந்து அதற்கேற்ப பேசினார். பொதுவாக, பெருந்திரளான மக்கள் கூடும் மகா சபைகளில் பேசுவோர் ஸ்ரீ அருள்நந்தியைப் பின்பற்ற வேண்டும்.

—வளரும்



—…தாமரைச்செல்வி…

கையிலிருந்த கடிதத்திலுள்ள விலாசத்தையும் எதிரே தெரிந்த பச்சை வர்ணமடித்த சின்னஞ் சிறிய வீட்டையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு திருப்தியுடன் உள்ளே நுழைந்தேன். பூட்டப்பட்டிருந்த வாசல் கதவை மெதுவாகத் தட்டினேன். என் கையிலிருந்த பெட்டியை கீழே வைத்துவிட்டு கதவு திறக்கும்நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

முதலில் காலடி ஓசை… அதைத்தொடர்ந்து கதவு திறந்தது.

நடுத்தர வயதைக் கடந்த ஒருவர் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு “என்ன வேண்டும்?'' என்று சிங்களத்தில் கேட்டார்.

எனக்கு சப்பென்று போய் விட்டது.

நீ, கொழும்பிற்கு இரண்டு மாத பயிற்சிக் கடமைக்காக என்னை மாற்றல் செய்திருந்து இந்தக் கிராமத்திற்கு வரும் வரை நான் எங்கே எப்படிக் தங்குவது என்ற கேள்விதான் மனதைக் குடைந்துகொண்டிருந்தது இங்கே வந்து ஒவ்வொருவரிடமும் விசாரித்து இந்த வீட்டுக் காரர்களுக்கு மட்டும் தமிழ் தெரியும் என்றறிந்து இங்கே வந்தால் … இவரும் சிங்களம் பேசுகிருரே.

எனக்கு குழப்பமாக இருந்தது.

‘நீங்கள் தமிழர்கள் இல்லையா—?'' நான் தமிழிலேயே கேட்டேன்.

அவரது முகம் சட்டென்று மலர்ந்தது.

தம்பி! இங்கே தமிழர்களை நாங்கள் காண்பது குறைவு. உங்களையும் சிங்களவர் என்று எண்ணிவிட்டேன். வா தம்பி உள்ளே…''

அவர் கனிவாக வரவேற்ருர். இப்போதுதான் போன உயிர் வந்தது எனக்கு.

“எனக்கு இந்த கிராமத்துக் கச்சேரியில் இரண்டு மாதம் வேலை. தங்கஇடம் வசதியாகக் கிடைக்குமா என்றுதான்…'' நான் இழுத்தேன்.

“எங்கள் வீடு சிறியது வசதிகள் குறைவாகத்தான் இருக்கும்…''

‘பரவாயில்லை. இரண்டு மாதம் தானே…

‘கொஞ்சம் இரு இதோ வர்றேன்.’

அவர் உள்ளே போனுர். இப்போது நான் சுற்றுப்புறத்தை நோக்கினேன். மிகவும் சிறிய கூடம். எதிரெதிராக இரண்டு அறைகள். மறுபக்கச் சுவரிலும் ஒரு கதவு இருந்தது. அதன் வழியாகத்தான் அவர் உள்ளே போனுர். அது சமையலறையாக இருக்கலாம். மிகவும் எளிமையாக இருந்தது கூடம். சுவரில் மகாத்மா காந்தியின் படம் மட்டுமே மாட்டப்பட்டிருந்தது.

‘தம்பி’—நான் திரும்பினேன் அவரும் இன்னொரு பெண்ணும் நின்ருர்கள்.

‘இவ என் மனைவி. அந்த அறையை உனக்காக ஒதுக்கி விடுகிருேம். ம்… சாப்பாடு…?'' அவர் கேட்டார்.

‘நான் கடையிலேயே சாப்பிடுகிறேன்.’ நான் அவசரமாகச்சொன்னதும் அவர் தன் மனைவியைப் பார்த்தார்.

‘வேணும் தம்பி எங்கள் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொள். எளிமையான சாப்பாடுதான் ஆனுல் மனம் நிறைஞ்சு தருவோம்.''

அந்த அம்மா இப்படிச் சொன்னதும் என் மனம் நெகிழ்ந்தது. அவர்களது வறுமையில் நானும் பங்குபோடுவது எனக்குப் பிடிக்கவில்லை. என்ருலும் அவர்களது அன்பான உபசரிப்பை மறுக்கவும் முடியவில்லை.

“அப்படியானுல் காலையும் இரவும் இங்கே சாப்பிட்டுக் கொள்கிறேன். அதற்காக பணம் தருவேன். வாங்கிக் கொள்ளவேண்டும்.''

அவர்கள் சம்மதித்தார்கள்.

எனக்காகத் தந்திருந்த அறை மிகவும் சிறியதாக இருந்தது. ஒரு கட்டிலும் ஒரு மேஜையும் ஒரு நாற்காலியும் மட்டுமே அங்கு இருந்தன.

நான் உடைகளை மாற்றிக் கொண்டு கூடத்திற்கு வந்தேன். எப்படிப் பொழுதைக் கழிப்பதென்று விழித்தேன். பேச்சுத்துணைக்குக் கூட யாருமே வீட்டில் இருக்கமாட்டார்கள் போலிருக்கிறதே... ஒன்றிரண்டு சிங்களப் பத்திரிகைகள் நாற்காலிகளில் பரவிக் கிடந்தன. நான் அறைக்குள் போய் என் பெட்டிக்குள்ளிருந்து அகிலனின் சித்திரப் பாவையை எடுத்துக்கொண்டு வந்து நாற்காலியில் அமர்ந்து புரட்டினேன். புகைவண்டியில் வரும்போது வாசித்த பாதியில் மடித்திருந்த பகுதியிலிருந்து தொடர்ந்து வாசித்தேன். காப்பிகொண்டு வந்து தந்தார் அந்த அம்மா.

வெய்யில் நன்றாக இறங்கி விட்டிருந்தது. காப்பிக்கோப்பையை இதழில் வைத்துப் பருகினேன். திறந்திருந்த வாசல் கதவினூடாக ஓடிய என் கண்கள் ஒரு விநாடி ஆச்சரியத்துடன் அகல விரிந்தன. ஒரு அழகான இளம்பெண் நாலைந்து புத்தகங்களை மார்புடன் அணைத்தபடி வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அழகாக சேலை கட்டிக் கொண்டிருந்தாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முகத்தைப் பார்த்தால் தமிழ்ப் பெண் போலத்தான் தெரிந்து. ஆனால் இங்கே தங்களைத் தவிர அக்கம் பக்கத்தில் வேறு தமிழர்கள் இல்லை என்று இந்த பெரியவர் கூறினாரே... ஒருவேளை சிங்களப்பெண்ணாக இருப்பாள் என் கண்ணுக்குத் தமிழ்ப்பெண்ணாகத் தெரிகிறதோ என்று நினைத்தேன்.

ஒரு விநாடியில் மனதில் பரவிய எண்ணங்களைக் கலைத்து விட்டு காப்பிக்கோப்பையை அந்த அம்மாவிடம் கொடுக்கத் திரும்பினேன். அவரைக் காணவில்லை. இதற்குள் அந்தப் பெண் வாசலுக்கு வந்துவிட்டாள். என்னைக் கண்டதும் ஒரு கணம் தயங்கி நின்றாள். அவ்விடத்தில் அவளை விசாரிக்க யாருமில்லாததால் அவள் சிங்களப்பெண்ணாக இருப்பாளோ என்ற நினைவில் 'யார் வேண்டும் உங்களுக்கு?' என்று சிங்களத்தில் கேட்டேன். அவள் மிரண்டு போய்விழிப்பது ஏனென்று எனக்குப் புரியவில்லை. அப்படியொன்றும் நான் தவறாகக் கேட்கவில்லையே...

இதற்குள் அந்த அம்மா அங்கே வந்தார்.

"வா கமலா, ஏன் இவ்வளவு நேரம்?" என்று தமிழில் வரவேற்கவும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

'தம்பி இவள் எங்கள் மகள் கமலா. ஓரளவு படிச்சிருக்கா. நாலைஞ்சு பிள்ளைகளுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கிறா. இவருக்கு இங்கே இரண்டுமாத வேலையாம். இங்குதான் தங்க வசதிசெய்து கொடுத்திருக்கிறோம்."

இவள் இவர்களது மகளா? நான் அசடு வழிய கமலாவைப் பார்த்துச் சிரிக்க முயன்றேன். அவளுக்கு நன்றாக சிரிப்பு வந்திருக்கவேண்டும்... ஆனால் மெல்லிய புன்னகையுடன் இதழ்களைக் கடித்துக்கொண்டாள். அட இவள் இவர்களது மகளாக இருக்கக் கூடும்என்று ஏன்தான் தோன்றாமற் போயிற்றோ என்று மனதைக் கடிந்துகொண்டேன். அவள் வீட்டிலேயே இருந்துகொண்டு அவளையே யாரைப் பார்க்க வந்தீர்கள் என்று விசாரித்தால் அவளுக்கு எப்படி இருந்திருக்கும் ... என்னை எத்தனை அசடாக எடை போட்டிருப்பாள். நான் அவளைப் பார்க்கத் திரும்பியபோது அவள் நின்ற இடம் காலியாக இருந்தது.

'இந்தாங்க தண்ணி'

இரவுச் சாப்பாடு சாப்பிட்ட கையுடன் பின் வாசலுக்குப் போன போது கமலா தண்ணீர்ச் செம்பை நீட்டினாள். அவள் முகத்தைப் பார்க்க வெட்கமாக இருந்தது. மௌனமாக வாங்கிக் கழுவினேன்.

## தவணையும் தவறணையும்

கவிஞர் காசி ஆனந்தன் இரண்டாவது முறை கைது செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு நெடுங்கேணியில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கில் ஒருவர் உரையாற்றும் பொழுது தான் பதவியாவுக்கு நெல் வாங்குவதற்காக சென்றபொழுது சிங்களக் காடையர்களினால் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை கூறும் பொழுது ஒருநாள் முழுவதும் நீரில் அமிழ்த்தியும் இன்னும் பல கொடுமைகளை செய்ததோடு மட்டுமல்ல பொலிசாரிடமும் ஒப்படைத்துவிட்டார்கள். இந்த வழக்குத் தவணைக்கு இன்று கூட சென்றுவிட்டுத்தான் வந்திருக்கின்றேன் என்றார். தொடர்ந்து பலர் உரையாற்றிக்கொண்டிருந்தார்கள். அப்போது யாரோ ஆட்சியாளரின் அடிவருடிகளினால் ஒருவருக்கு மூக்குமுட்ட வாங்கிக்கொடுத்து கலாட்டா செய்யவிட்டிருக்கின்றார்கள். இவற்றை எல்லாம் அமைதியோடு கவனித்துக்கொண்டிருந்த கவிஞர் காசி இறுதியாக பேச எழுந்தார். அவர் பேசும் பொழுது கூறினார்—தவணைக்குப்போய் வந்தவர்களும் வந்திருக்கின்றார்கள் தவறணைக்குப் போய்வந்தவர்களும் வந்திருக்கின்றார்கள். தவணைக்கு போய் வந்தவருக்குத் தெரியும் தமிழனின் நிலைமை; தவறணைக்குப்போய் வந்தவருக்கு எப்படித் தெரியும் தமிழன் நிலைமை? என்றாரே பார்க்கலாம்—மக்கள் மத்தியில் எழுந்த கர கோஷம் அடங்க சில மணித்துளிகள் எடுத்தன.

—தகவல்: பொன். பத்மநாதன்

‘நீங்க கொழும்பில இருந்தா வர்றீங்க...’ அவள்தான் கேட்டாள்.

‘ஆமாம்’

‘சொந்த ஊரே கொழும்பா?

‘இல்லே, யாழ்ப் பாணப் பக்கம் பரந்தன்’



இப்படித்தான் எங்கள் பேச்சு முதலில் ஆரம்பித்தது. அதன் பின்னர் எத்தனையோ சம்பாஷணைகள் ... உரையாடல்கள்...

என்னமோ தெரியவில்லை... என் இதயம் நழுவி எனைவிட்டு ஓடுவது போன்ற பிரமை ... அவளது அழகிய கண்கள் என் மனதில் பசுமையான நினைவுகளை எழுப்பி என்னைப் பைத்தியமாக அடித்துக்கொண்டிருந்தது. இது என்ன உணர்வு... இது என்ன மாற்றம்... இத்தனைக்கும் அவள் அதிகமாகப் பேசுவதுமில்லை. எண்ணி எண்ணிப் பேசுவது போலச் சுருக்கமான பேச்சு...அந்த அடக்கம் தான் என்னை அதிகம் கவர்ந்தது. நான் வேலை முடிந்து வீடு வரும் நேரம் அவளும் திரும்பி விட்டிருப்பாள். இனிய உப சரிப்பு... முகமலர்வுடன் காப்பியை நீட்டுவாள். அந்தக் கனிவான அன்பை அனுபவிப்பதற்காகவே ஒவ்வொரு மாலையையும் நான் ஆவலோடு எதிர்பார்த்தேன்.

தங்கள் குடும்பம் பற்றியும் கூறுவாள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவளது பெற்றோர் தாங்கள் காதலுக்கு மற்றவர்கள் தடைவிதித்ததால் வீட்டை விட்டு ஓடி இங்கே வந்துவிட்டார்களாம். அன்று வந்து இந்தக் கிராமத்தில் குடியிருந்தவர்கள்தான் பின்னர் ஊர்ப்பக்கமே போகவில்லையாம். தனது பெற்றோரின் வீரக் காதலைப் பற்றிக்கூறும் போது அவள் முகம் பெருமிதத்தால் சிவந்துபோயிருக்கும் அந்த நளினமான சிவப்பை என் உள்ளம் திருட்டுத்தனமாக ரசிக்கும்.

ஒரு நாள்... அன்றுதான் சித்திரப் பாவையில் கடைசி அத்தியாயத்தை வாசித்து முடித்தேன். புத்தகத்தை மூடி விட்டு நிமிர்ந்தபோது கதவு ஓரம் நின்று என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள் கமலா.

“என்ன கமலா—

“நானும்தான் பார்க்கிறேன் அடிக்கடி அந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருகிறீர்களே. என்ன புத்தகம் அது.”

‘அகிலன் எழுதிய சித்திரப் பாவை.’

‘நல்ல கதையா?’

“ஒரு லட்சம் பரிசுபெற்ற கதையாயிற்றே...”

‘அம்மாடி! ஒரு லட்சமா?’ அவள் வியந்து கூவினாள். நான் ஆச்சரியத்துடன் ‘உனக்குத் தெரியாதா என்ன?’ என்று கேட்டேன்.

‘தெரியாதே! அகிலன் யார்? நல்லா எழுதுவாரா?

இப்போது நான்தான் வியந்து கூறவேண்டியதாயிற்று.

‘அகிலன் என்பது யார் என்றே தெரியாதா—?’

‘இங்கே இருந்து கொண்டு என்னால் எதைத்தான் அறிய முடியும். தமிழர்களைக் காண்பதே அரிது. பத்திரிகைகளைக் கண்ணாலும் கண்டதில்லை. வானொலியும் இல்லை. அக்கம் பக்கத்து வானொலிகள் தமிழ் ஒலிபரப்பை அறியாதவை”

அவள் குரலில் வெட்கமும் வேதனையும் இழையோடியது. நான் மனம் நெகிழ அவளைப் பார்த்தேன்.

‘கமலா! உன் நிலை எனக்குப் புரிகிறது. தமிழின் மீது உனக்கு மிகவும் ஆர்வம் இருக்கிறது...’

‘ஆர்வம் இருந்து என்ன பிரயோசனம்’?

அவள் கண்கள் சட்டென்று கலங்கியது.

‘ஏன் கமலா?’ அவளது கலக்கத்தின் காரணம் எனக்குப் புரியவில்லை. ‘ஒன்றுமில்லை’ அவள் வெளியே ஓடிவிட்டாள்.

நாட்கள் நகர நகர கமலாவைப் பிரிந்துபோக வேண்டி வருகிறதே என்ற ஏக்கம் என்னை வாட்டியது. எப்படியும் அவளைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் வேரூன்றியது. என் பெற்றோர் எனக்குத்தடை சொல்லமாட்டார்கள். கமலாவின் பெற்றோர் சம்மதித்தால் சரி, முதலில் கமலாவின் சம்மதம்...

அதை எப்படி அவளிடம் கேட்பது—? நேராகக் கேட்டு அவள் ஏதாவது சொல்லி விட்டால்...அன்பாகத் தான் பழகுவதை நான் தப்பாகப் புரிந்து கொண்டு விட்டேன் என்று அவள் நினைத்தால்...


என்ன வழியென யோசித்தேன். சட்டென்று ஒரு எண்ணம்...

சிறு கடிதமாகவே எழுதிக் கொடுத்து விட்டால்...

நான் காகிதமும் பேனாவுமாக உட்கார்ந்தேன். காதல் வசப்பாட்டால் கவிதை தன்னால் வரும் என்பார்களே அது உண்மை என்பதை இன்று புரிந்துகொண்டேன். என் அன்புக்குரியவளுக்கு கவிதையாக என் மனதை கோடிகாட்டி அவள் விருப்பத்தைக்கேட்டேன். எழுதிய கவிதையை வாசித்துப் பார்த்தேன்.

‘பொன் நிகர்த்த பூங்கொடியே
பூவே உந்தன்
பொங்கு தமிழ் உணர்வதனின்
பொலிவு கண்டேன்
எண்ணமெலாம் இழந்த நிலை
இதயம் கொண்டேன்
வண்ண மயில் நிலை அறிய
வாஞ்சைகொண்டேன்’’

திருப்தியாக இருந்தது. கமலா காப்பியுடன் வந்தாள். காப்பியைவாங்கிக்கொண்டு‘கமலா இதைக்கொண்டு போய் படித்துப் பார்’ என்று காகிதத்தைக் கொடுத்தேன். புரியாமல் தடுமாறும் விழிகளை என் மீது பதித்து விட்டு அறையைவிட்டு வெளியேறினாள் அவள். எனக்குள் ஒரு குறுகுறுப்பு. எனது கவிதையைப் படிக்கும்போது அவள் முகத்தில் என்னென்ன உணர்ச்சிகள் தோன்றும்,வெட்கித் தலை குனியும் அந்த அழகைப் பார்க்க வேண்டும் போன்ற துடிப்பு ... நான் எழுந்து வந்து அவள் அறை வாசலை நோக்கினேன். திறந்திருந்த சாளரம் எனக்கு உதவியது.



நோயாளி: டாக்டர்!... டாக்டர்!!...

டாக்டர்! என்னப்பா வயிற்றைப் பிடித்துக்கொண்டு ஓடி வருகிறாய்?

நோயாளி: வயிற்று வலி டாக்டர் எனக்கு நெடு நாளாகவே இருந்து கொண்டு வருகுது.

டாக்டர்: நெடு நாள் என்றால்;... எத்தனை மாதம் இருக்கும்?

நோயாளி: இப்போ எட்டு மாதம் டாக்டர்.

டாக்டர்: எதுக்கும் இன்னும் இரண்டு மாதம் பொறுத்திரு.

நோயாளி: ?......?......?......

—க. சிவபாதம் களுவாஞ்சிக்குடி

வேகமாக உள்ளே சென்றவள் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள் ...‘பார்த்தாள்... பார்த்துக்கொண்டே இருந்தாள். ஜிவ்வென்ற சந்தோஷ உணர்ச்சி என் இதயமெங்கும் பரவியது. ஒரு கணம்தான்... மறுகணம் அவள் கடிதத்தைக் கைக்குள் கசக்கிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். அந்தக்கேவல் என் நெஞ்சை வாள் கொண்டறுத்தது. நான் நிலைகுலைந்துபோனேன். அவளைத் தவறாக கணித்து விட்டேனா... காப்பி என் வாயில் கசந்தது.

அன்று இரவு என் கண்கள் அவளைத்தேடின. சேலைத்தலைப்பைக் கூடக் காணோம். அதன் பிறகு கூட என்றால் அவளைச் சந்திக்க முடியவில்லை. அவளது மென்மையான உள்ளத்தை நோக வைத்துவிட்டேனே... என்று ஒவ்வொரு வினாடியும் உருகினேன். என் மனம் தவித்தது.

ஒரு வாரத்தின் பின் கமலாவைப் பின் தோட்டத்தில் சந்திக்கமுடிந்தது. என்னைக் கண்டதும் ஓடிவிடத் துடித்தாள். நான் முன்னால் மறித்து ‘கமலா ஏன் இப்படி என்னைக் கண்டு ஓடுகிறாய்—நான் அப்படி எழுதியதற்கு மன்னித்து விடு.உன்னை எந்த விதத்திலும் நான் வற்புறுத்தவில்லையே... கமலா என்னைப் பார்—’’என்றேன் கெஞ்சலுடன். அவள் கண்களில் பொங்கிய நீர் கன்னங்களில் வழிந்தது. தலை குனிந்து நின்றாள்.

‘கமலா...’

‘ம்—’?

‘என்னை உனக்கு ஏன் பிடிக்கவில்லை? அதை மட்டும் சொல்லு.’

ஒரு வினாடி மௌனத்தின் பின் அவள் சொன்னாள்.

“நான் சொல்லுவதை நீங்கள் நம்புவீர்களோ தெரியாது. அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறீங்கள் என்றே என்னால் வாசிக்கமுடியவில்லை. அதுதான் நினைச்சு நினைச்சு அழுறேன்”

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

'ஏன் கமலா—?'

'எனக்கு ...எனக்கு ... தமிழ் எழுத வாசிக்க தெரியாது...'

இப்போது அவள் நிலையை என்னால் புரிந்துகொள்ளமுடிந்தது.

'நாங்கள் சிங்களவர்கள் மத்தியில் வாழ்ந்ததால் தமிழோடு தொடர்பே இல்லாமல்போய் விட்டது. நான் பெற்றோரிடமிருந்து பேச்சுத் தமிழை மட்டும் கற்றேன். நாள் முழுக்க உழைப்பில் ஈடுபடும் அவர்களால் எனக்கு தமிழ் எழுத வாசிக்க கற்றுத்தரமுடியவில்லை. இங்கே தமிழர்களோ தமிழ்ப் பள்ளிக்கூடமோ இல்லை. சிங்கள மாணவர்களுடன் ஒருத்தியாகத்தான் சிங்கள பள்ளிக்கூடத்தில் படித்தேன். தமிழ் மேல் எனையறியாது வளர்ந்த ஆர்வம் எனக்குள்ளேயே செத்துப்போன போதுதான் நீங்க இங்கே வந்தீங்க. உங்களை நானும் விரும்பினேன். ஆனால்... நீங்க அதில என்ன எழுதியிருக்கிறீங்க என்பதை என்னால் வாசிக்கமுடியாததால் உங்க கண்ணில் விழிக்க எனக்கு தைரியம் இல்லை. நான் ஒரு தமிழ்ப்பெண்ணாக இருந்துங்கூட தமிழ் எழுத வாசிக்க தெரியவில்லையென்றால் அது எவ்வளவு அவமானம் என்னால் தாளமுடியாத வேதனை..."

தன் கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு அழுதாள் அவள்.

'கமலா! அவமானப்பட வேண்டியவள் நீயல்ல. உன் பெற்றோர்களை வீட்டைவிட்டு ஓடிவரச் செய்த சமூகம்தான் இதற்காக அவமானப்பட வேண்டும். ஆனால் இப்படியே போனால் உங்கள் தலைமுறையுடன் தமிழுக்கும் உங்களுக்கும் இருக்கின்ற தொடர்பு அறுந்துவிடும். கமலா! உன்னைப் போன்ற நிலையில் எத்தனைபேர் இருக்கிறார்கள். உழைக்க வழிதேடி ஊர்விட்டு ஓடிய பரிதாபத்துக்குரியவர்கள். தங்கள் இனத்தையும் மறக்கமுடியாமல் பிறமொழிக்கும் இணங்க இயலாமல் மனதோடு போராடிக்கொண்டு வாழ்கிறார்களே ... எவ்வளவு கொடுமையானது. கமலா அழாதே. நான் ஒரு வழிசொல்கிறேன்."

அவள் கண்ணீரைத் துடைத்தேன்.

'கமலா! ஒரு தமிழ்ப் பரம்பரையை உருவாக்க உன்பெற்றோர் தவறிவிட்டார்கள். அதே தவறை தொடர்ந்தும் செய்தால் அடுத்த தலைமுறைகளுக்கும் தமிழுக்கும் உள்ள நூல் அளவுள்ள தொடர்பும் அறுந்துவிடும் நாம் ஒரு நல்ல தமிழ்த் தலைமுறையை உருவாக்குவோம். நீ என்னை மணந்துகொள்வாயா?

அழுகையினூடும் வெட்கச் சிரிப்புடன் அவள் தலை குனிந்தாள். என் தோளில் கிடந்த அவள் முகத்தை நான் அன்புடன் பார்த்தேன்.

(கற்பனை)

---

## ஊரும் பேரும்

## முந்தல்

ஈழ மணித்திரு நாட்டில் ஈண்டு வடமேல் கரையில் தமிழும் சைவமும் இரண்டறக் கலந்து விளங்கி வரும் தமிழ் உணர்ச்சி பொருந்திய கிராமங்களில் "முந்தலும் ஒன்றாகும.

வடதெற்கே காடுவெட்டி, களனியாக்கி கமஞ்செய்யும் நெல்வயல்களும் மேற்கே நித்திலம் கொழிக்கும் கடலும்—புத்தளம்—சிலாபம் பிரதான வீதியும், இக் கிராம எல்லைகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பகுதி ஆதிக் குடிகள் இராமேஸ்வரத்திலிருந்து, குடிபெயர்ந்து மன்னாரை அண்மித்துள்ள முத்துச் சிலாபம் என்னுமிடத்தில் குறிப்பிட்ட சில காலங்களில் வாழ்ந்து. மாரியம்மன் வழிபாட்டை பூஜித்து பின் அங்கிருந்து புத்தளம் — கல்பிட்டி ஆகிய இடங்களிலும் சில காலங்களில் வாழ்ந்து—அங்கும் மாரியம்மன் வழிபாட்டை முடித்தபின் அங்கிருந்து குடிபெயர்ந்து தற்பொழுது "முந்தல்" என்ற பெயர் வழங்கும் இவ்விடத்தில் தங்கி 'திரௌபதையம்மன்' ஆலயத்தைக் கட்டி வழிபாடு செய்து வந்தனர்.

பின்புதான் இந்த மூதாதைகள் உடப்புக்கு இடம் புகுந்தார்கள். இவர்கள் உடப்புக்கு வருகின்றமைக்கு முன்னர் உடப்பு மக்கள் இங்குதான் 'முன் தங்கி' முன்னேற்றத்துக்கான முறைகளை செப்பனிட்டார்கள்.

உடப்பில் வதியும் மக்கள் உடப்பு வருகின்றமைக்கு முன்னமே "முன் தங்கினமையாற்றான்" "முன் தங்கல்" என்ற பெயரைச் சூட்டினார்கள். வரலாற்று ரீதியில் இரு கிராமங்களின் தொடர்புகள் நெருக்கமுடையதாகக் காணப்படுகின்றது.

பின்னர் இப்பெயர் காலக் கிரமத்தில் மருவி, தற்பொழுது "முந்தல்" என்ற பெயராக வழங்கி வருகின்றது.

—உடப்பூர் வீரசொக்கன், வி. பி. துரை

● குட்டிக்கதை

# மதிநுட்பம்!

தென்னமர ஓலையொன்றில் ஏதோ யோசனையில் ஆழ்ந்துகொண்டிருந்த காக்கையின் பக்கத்தில் பறவைகளின் தலைவரான பருந்து திடீரெனப் போய் அமர்ந்துகொண்டது. சற்றும் எதிர்பாராமல் இப்படி பருந்து வந்து தன் பக்கத்தில் அமர்ந்ததைக் கண்ட காக்கைக்கு மூச்சுத் திணறி வந்தது. தன்னையறியாமலேயே ஒரு நடுக்கம், பீதி, கூச்சம் எல்லாமே ஒன்றுசேர்ந்து வர காக்கை பட்டபாடு சொல்லும் தரமன்று.

சில வினாடிகள்தான், காக்கையர் தலையைக் குனிந்தபடி அவ்விடத்தைவிட்டுப் பறந்து போக முயற்சிக்கும்போது அதை அவதானித்த பருந்து— "காக்கையரே! எங்கே போகப் போகிறீர்? இங்கே நில்லும். உன்னுடன் நான் சில விடயங்கள் பேசுவதற்காகவே இங்கு வந்திருக்கிறேன்!" என்று சொல்லி காக்கையைத் தடுத்தது.

இதைக் கேட்டதும் காக்கை பதறிப்போய்— "என்ன தலைவா; 'என்னோடு பேசுவதற்காகவா நீங்கள் வந்திருக்கிறீர்கள்! இதைச் சொல்லியிருந்தால்' நானே உங்களை தேடி ஓடோடி வந்திருப்பேனே!" என்று சொல்லியபடி மெல்லத் தலையைக் குனிந்துகொண்டது.

"பரவாயில்லை. எனக்கும் பல நாட்கள் இந்தப்பக்கம் வர வேண்டுமென்ற ஆசை அதனால் தான் இப்படி எவருக்கும் சொல்லிக்கொள்ளாமல் வந்துவிட்டேன்."

இப்படிச் சொல்லும்போது பருந்தின் கண்கள் அகல விரிந்து மூடுவதைக் கண்ட காக்கைக்கு இனம் புரியாத பயம் அதன் உடலைப் போட்டு ஆட்டுவித்தது.

"தலைவா, என்னோடு ஏதோ பேசவேண்டுமென்று சொன்னீர்களே! அப்படி என்ன முக்கியமான விடயம்?" காக்கைக்கு இப்படிக் கேட்டு அறியாவிட்டால் உயிரே போய் விடும் போலிருந்தது.

பருந்து வாய் திறந்தது.

"காக்கையரே, 'நீங்கள் நம் மினத்திற்கே பெருமை தேடித் தருகின்ற இனிய கானம் இசைக்கின்ற குயில் கூட்டத்தை சற்றும் மதியாமல், இரக்கமின்றி கொத்தி துன்புறுத்துகிறீர்களாமே உண்மையா? 'சொல்' உண்மையா இது!"

"இல்லை தலைவா! பொய்! சுத்தப் பொய்!"

"அப்படியானால் உண்மை தான் என்ன?"

"தலைவா, இந்த உலகத்தில் நீங்கள் அறியாதது எதுவுமேயில்லை! நாங்கள் குயில்களை ஏன் கொத்தித் துரத்தவேண்டும்! அவைகளின் முட்டைகளை அடைகாத்து, குஞ்சுபொரித்து, அதற்கெல்லாம் தாய்தந்தையராக வாழும் நாங்கள் அவைகளைத் துன்புறுத்துவோமா? இது உங்களுக்கு யாரோ கட்டி வைத்துச் சொன்ன கட்டுக் கதை! நீங்கள் நம்பாதீர்கள்!"

"காக்கையரே ஏன் பொய் சொல்கிறீர்! காக்கைகள் குயில்களைத் துரத்துவதையும் அவைகளின் இனிய கீதத்தைத் தொடரவிடாமல் குலைப்பதையும் நானும் என் கண்களால் பல தடவைகளில் பார்த்திருக்கிறேனே!"

இப்படி பருந்து ஆவேசமாகச் சொன்னதும் காக்கை சத்தம் போட்டே சிரித்துவிட்டது.

"ஏன் சிரிக்கிறீர் காக்கையரே?"

"தலைவா, மன்னிக்கவேண்டும். நீங்கள் எங்களைப்பற்றித் தவறாக எடைபோட்டுவிட்டீர்கள். குயில்கள் கூவும்போது நாங்கள் அவைகளைக் கொத்திக் கலைப்பது உண்மைதான். ஆனால் அப்படி நாங்கள் ஏன் செய்கிறோம் தெரியுமா?"

"எனக்குக் கதை சொல்ல வேண்டாம்! உண்மையைச் சொல்!"

"சரி தலைவா சொல்லிவிடுகிறேன்!"

"என்ன அது!"

"தலைவா, கண்டநின்ற இடங்களிலெல்லாம் வைத்து மதுரகானமிசைத்தால் இந்தப் பூமியில் வாழுகின்ற மனிதர்களின் கண்கள்பட்டு நமது இனத்திற்கு அழியாப் புகழைத் தந்துகொண்டிருக்கின்ற குயில்களின் குரல்களெல்லாம் நாசமாய்ப் போய்விடுமே! அதனால் தான் அதைப் பாதுகாப்பதற்காக அவைகளை மறைவான இடங்களில் போய் இசைமாரி பொழியும்படி சொல்லி கலைத்து விடுகிறோம். மற்றப்படி எங்களுக்குள் எந்தவிதமான பகைமையும் இல்லை."

காக்கை இவ்விதம் சொன்னதைக் கேட்ட பருந்திற்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. "அப்படியா! நான்தான் அறியாமல் ஏதோவெல்லாம் எண்ணிவிட்டேன். தயவு செய்து என்னை மன்னித்து விடும் காக்கையரே!" என்று சொல்லி காக்கையின்முன் பருந்து தலைகுனிந்து நின்றது.

"தலைவா! தலைவா! என்ன இது! நான் உங்களை மன்னிப்பதா! மனதில் எதையும் மறைத்து வைக்காமல், தலைவரென்ற ஆணவம் சிறிதுமில்லாமல் அற்பனை என்னைத்தேடி வந்த தங்களின் முன்னால் விழுந்து வணங்கவேண்டியவன் நானல்லவா!" என்று சொல்லி பருந்தின் முன்னால் காக்கை தலைகுனிந்து நின்றது.

— செ. குணரத்தினம்

# சாத்தான் வேதம் ஓதுகின்றது



(12)

ஒரு மனித சீவன் செய்யக் கூடிய முயற்சிகள் அனைத்திலும் மிக மிகச் சிறந்தது தனக்குத் தானே முற்றிலும் யோக்கியமாக இருப்பதுதான்.

—ப்ராய்டு—

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்று பெரும்பாலும் கூறுவார்கள். அந்த இடத்தில் மனத்தினைப் பறி கொடுத்துவிட்டால் மீளப் பெறுவது கடினம் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மையாகும். எங்கே தான் போகக்கூடாது. எந்த இடத்தில் காலடி எடுத்து வைக்கக்கூடாது என்று நினைத் தாளோ அங்கே போக நேர்ந்து விட்டதற்காகவும்; தான் போன வேளையில் மனேகர் பட்ட அவஸ்தையையும் நினைத் துப் பார்க்கையில் அவளுடைய அப்போதைய மனநிலையில் தோன்ருத சில கருத்துக்கள் பின்பு மதுமலருக்கும் புரியலா யின.

அன்றிரவு மதுமலர் இறங் கிக் கடைக்குள் சென்றதும் அவன் தன்னை எதிர் பாராத நிலையில் சந்தித்ததும் அதிர்ச்சி யடைவான், அந்தரப்படுவான் என்றெல்லாம் எதிர்பார்த்தே சென்ருள். ஆனல் அவளைப் பார்த்ததும் அவன் பயந்து விட்டான். சிவபூசையில் கரடி யாக அவள் நுழைந்தது மட்டு மன்றி அவள் வந்த கையோடு பின்னலே கீதாவும் அவள் அழைத்து வந்த பெண்ணும் வந்ததைப் பார்த்ததும் செய் வதறியாது தடுமாறினன் மனேகர்.

"என்ன மனே கடையை நேரத்தோடு பூட்டிவிட் டீர்களா என்ருள் மதுமலர்.

"ஆமாம் பையன்கள் இன்று எங்கோ போகவேண்டும் என்று அவசரப் பட்டார்கள்— அது தான்..."

"அதுசரி நீங்களேன் பதட் டப் படுகின்றீர்கள்?"

"என் பதட்ட மிருக்கட்டும். நீர் ஏன் இங்கே வந்தீர்? இன்று உம்மிடம் வரவேண்டும் என்று நினைத்தேன்."

"நிஜமாகவா?

"ஆமாம். யாரோ வெளியில் நிற்கிருர்கள். இப்படியிரும். அவர்களை என்னவென்று விசாரித்துவிட்டு வந்து விடு கின்றேன்." என்று கூறி வெளியே சென்ருன்.

கடை வாசலில் கீதாவும் அவள் கூட்டிவந்த பெண்ணும் நின்றிருந்தனர். மங்கிய வெளிச்சத்தில் அவர்களைப் பார்த்துவிட்டு "கடை பூட்டி யாச்சு. ஏதாவது தேவையா ஞல் நாளைக்கு வாருங்கள்." என்று பலமாக மதுமலருக்குக் கேட்கக் கூடியதாக கூறிவிட்டு "மிஸ் கீதா என்னை மன்னித்து விடுங்கள். உங்களை நாளைக்கு வரும்படி மிகப் பணிவாகக் கேட்கின்றேன். உங்களுக்கு பணம் அவசரம் என்ருல் இப் பவே தந்துவிடுகின்றேன்." என்ருன்.

"உள்ளே நிற்பது உங்கள் வைவ்'பா?" என்ருள் கீதா.

"நோ எனக்கு மிகவும் வேண் டியவள்."

"ஓ... அதுவும் நம்ம கேஸா?"

"அப்படியில்லை, பிளீஸ்... உங்..."

"ஓ. கே... ஓ. கே... உங்களைக் கஸ்டத்திலாழ்த்தவிரும்ப வில்லை. பணத்திற்கு அவசர மில்லை. வீ வில் மீற் ருமாரே" என்று கூறியவாறு இருவரும் புறப்பட்டனர்.

மனேகர் நிம்மதிப் பெரு மூச்சு விட்டான். அதன் பின்பு தன்னைச் சுதாகரித்துக்கொண்டு

கே.எஸ்.ஆனந்தன்

உள்ளே நுழைந்தான். அதற்கிடையில் மதுமலர் கடையின் உள்பகுதியில் பெரும் இடங்களை அலசிப்பார்த்துவிட்டாள். அவள் தான் ஏன் அங்கு வந்தாள் என்பதையே மறந்து பிட்டாள். மனோகர் உள்ளே வந்துகொண்டே "என்ன மது நின்றுகொண்டிருக்கின்றாய்?" என்றான்.

"மனோ கடையிலேயே நீங்கள் கைவரிசையை ஆரம்பித்துவிட்டீர்களா?"

"என்ன? என்ன அப்படி...?

"என்ன இது?" என்று சாராயப் போத்தலை எடுத்து அவன் முன் நீட்டிக் காட்டினாள்.

"இது மது...வந்து..." அவன் தடுமாறினான்.

"இது மதுதான்; கடைக்குள் எப்படி வந்தது?"

"என் பிரெண்ட் ஒருவன்..."

"மனோ! நீங்கள்... நீங்கள்..." அவள் விழிகளில் நீர் முட்டித் ததும்பியது.

"மன்னிச்சிடு மது. தவிர்க்க முடியாத ஒரு வியாபார நண்பன்—வாய் விட்டே கேட்டான்; அந்த மீதி தான் இது. நானும் கொஞ்சம்..." என்று சமாளித்தான்.

"இனிமேலாவது இப்படி வேலைகளை கடைக்குள் செய்யாதீர்கள். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்லுறன். சில சமயம் எனக்கு..."

"உனக்கில்லாத உரிமையா? அது சரி நீ ஏன் இங்கே வந்தாய்?"

"நான் இங்கே வந்ததற்கு முக்கிய காரணம் என் மகள். உங்களை அழைத்துக் கொண்டு அவள் விடயமாக ஒருவரைச் சந்திக்க வேண்டியுள்ளது."

"அதற்காக நீ இவ்வளவு தூரம் வரவேண்டுமா?"

"இனி நீங்கள் எப்போ வருவீர்களோ தெரியாது என்பதால்...இங்கே வரக்கூடாது என்றுதானிருந்தேன். ஆனால் வரவேண்டியாகிவிட்டது. உங்களுக்கு இதனால் ஏதும் இடைஞ்சலா?"

"பைத்தியம். உன் வரவு எனக்கு மகிழ்ச்சியா? இடைஞ்சலா? என்று அவளைப் பின்புறமாகக் கட்டியணைத்தான்.

"சீச்சீ விடுங்கள் என்னை?"

"ஏன்?"

"யாரும் பார்த்தாலும்"

"பார்த்தால் என்ன?"

"இது வியாபார ஸ்தாபனம். நீங்கள் செய்யும் தொழிலைத் தெய்வமாக மதிக்கணும்; இங்கே சீர்கேடுகள் நிலவுமாகில் அப்புறம் நிலை மாறிவிடும். மனோ பிளீஸ் நீங்கள்..." அவன் அவளைக் கைவிட்டு விட்டான்.

அவனை வழிக்குக் கொண்டுவரக்கூடிய வழி முறைகளை அவள் அறிந்து வைத்திருந்தாள். உடலுணர்வுகளைத் தீர்ப்பதற்காக மட்டும் அவனோடு அவள் பாசம் வைத்திருக்கவில்லை. அவளையுமறியாத ஒருவித விநோதமான பந்தத் தொடர்பு அவனுடன் ஏற்பட்டு விட்டது. ஆனால் அவன்...?

அவன் உள்ளுணர்வுகளில் கொந்தளிப்பு ஏற்படும் வேளைகளில் அவளை அவனுக்குத் தேவையாயிருந்தது. அதே சமயம் உடலுணர்ச்சிகளில் அவனுக்கு ஈடுகொடுத்து அவனைப் பரவசப்படுத்தி திருப்தி செய்யக்கூடியவளாகவும் அவள் விளங்கியதால் அவள் மீது அவனுக்கு ஒருவித பந்தத் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

இரு வழிகளில் அவர்களிடம் அன்பு ஆளுமை செலுத்தியது. மதுமலர் அவனிடம் அன்பு செலுத்திய காரணத்தால் அவன் உணர்வுகளுக்குத் தன்னை அர்ப்பணித்தாள். அன்புக்காக எதையும் செய்யலாம் என்ற மனம் படைத்தவள். கணவனை இழந்தவளானாலும் தனக்கு என்று இல்லாத ஒருவனுடைய அன்புக்கு ஆட்பட்டு அந்த அன்பினால் ஏற்பட்ட இன்பத்திற்கு ஆளானவள். பணத்துக்காக உடலை விற்பவள் விபச்சாரியானாலும் அவள் பணத்திற்கோ, பொருளுக்கோ தன்னுடலை, உணர்ச்சிகளை மற்றவனுக்கு ஒப்படைக்கவில்லை. தான் விரும்பும் ஒருவனுடன் ஆட்பட்டாள். சமுதாய விதிகளின் பார்வையில் அவள் செயல் தவறாகப் படினும் உண்மையில் அவள் ஒழுக்கம் கெட்டவளா???

ஒவ்வொருவரும் தம் மனத்தினைத் தொட்டு நாம் ஒழுக்கமுள்ளவர்களா? கண்ணியமுள்ளவர்களா என்று கேட்டுக் கொண்டால் பதில் கிடையாது. சமுதாயத்தின் பார்வைக்கு எல்லோரும் ஒழுக்கமுடையவர்களாகவே காட்டிக் கொள்ள விரும்புகின்றனர்...

மனோகரின் உடலமைப்பும், வலிமையும் அவனுக்கு நிகரான பெண்ணாக மதுமலர் ஈடுகொடுத்தமையினால் தான் அவள் மீது அவனுக்கு அன்பு பிறந்தது. அது ஆசையின் விளைவினால் ஏற்பட்ட அன்பு. அந்த ஆசை தீரும்வரை அன்பு காட்டும் அவனுடைய ஆர்வமும் தீராததாக விருக்கும். அவள் சொல்லுக்கு அடங்கி நடக்கும் சர்க்கஸ் விலங்கு போலிருந்தான்.

"என்ன மனோ பேசாமல் நிற்கின்றாய்? நான் சொன்னதில் ஏதும் கோபமா?"

"அப்படி ஒன்றுமில்லை மது. என்மனம் அமைதியின்றித் தடுமாறுகின்றது. நீ ஏன் வந்தாய்?"

"நான் வரக்கூடாதா?"

"யார் சொன்னது.? நீ தினம் தினம் இங்கு வரவேண்டும் என்று கனவு காண்பவன் நான்."

"அது நடக்கக் கூடியதா?

"ஏன்?"

"நீங்கள் ஒருத்தியின் கணவனாகி விட்டீர்கள். அவளுடமையில் நானும் சில உரிமைகளைப்

பெற்றுக் கொள்கிறேன். அதற்காக உரிமை கொண்டாடவோ அபகரிக்கவோ நினைக்கவில்லை. ஆதேசமயம்...”

“சொல் மனோ ஏன் நிறுத்திவிட்டாய்?”

“நாங்கள் புறப்படுவோமா?”

“ஆமாம்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

கடையின் வாசற் கதவைப் பூட்டி சாவியைக் கையில் எடுத்துக்கொண்டான். திரும்பி மதுமலரைப் பார்த்துச் “சரி” என்று தலை யசைத்தான்.

“மனோ நீங்கள் ஏதோ பதட்ட நிலையில் இருக்கின்றீர்கள்.”

“இல்லை. இல்லை. ஏன்?” என்றான்.

கதவின் ஒருபுறம் நிறுத்திச் சாத்தி வைக்கப்பட்டிருந்த இரும்புச் சிலாகையும், கீழே வைக்கப்பட்டிருந்த பூட்டுக்களும் எங்களை மறந்து விட்டுப் போகிறானே என்று கேட்பவை போலிருந்ததைச் சுட்டிக்காட்டினாள் மதுமலர்.

“ஓ... நான்... எப்போதும் கதவு பூட்டுவதுண்டு. இன்றுதான் புதுப் பழக்கம்” என்ற போது அவமானம் அவனைப் பிடுங்கித் தின்றது.

ஒரு அற்ப ஆசை (அவனுக்கு அப்படியல்ல) க்கு ஆட்பட்டதால் எத்தனை வினைகள் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டன.

பூட்டுக்களைப் பூட்டிவிட்ட பின்பு ஒவ்வொரு பூட்டாக மதுமலர் இழுத்துப் பார்த்தாள்: அதன் பின்பு திருப்தியுடன் அவனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

**அன்**றைய சம்பவத்தில் ஏதோ ஒரு சமயம் வந்த பெண்கள் யார்? அவர்களுக்கும் மனோகருக்கும் என்ன தொடர்பு? மனோகர் ஏன் அன்று பதட்டப்பட்டுக் காணப்பட்டான். சில வேளை அப்படி ஏதும்... நினைத்த



போது அவளுக்கு ஆத்திரம் வந்தது.

* * *

மாலையும், இரவும் சந்திக்கும் மனோரம்மியமான வேளை. மேற்கு வானில் மாலைச்சூரியன் மறைந்துவிட்டதால் வானம் சிவந்து அனல் வீசும் உலைக்களம் போலிருந்தது. அவற்றிற்குக் கீழே பஞ்சுப் பொதி போல விரைந்து செல்லும் மேகக் கூட்டங்கள் பொன் முலாம் தீட்டிய பிரஞ்சு நாட்டு ஓவியங்களைப் போலக் காட்சியளித்தன. ஆறு மணிக்கு ஆரம்பமாக வேண்டிய மாலைப் பூசை ஏதோ காரணத்தால் அரை மணிநேரம் தாமதித்ததால், இணுவில் சிவகாமி அக் கோவில் வாசலில் கூட்டமும் அதிகமாகக் கணப் பட்டது. கோவிலுக்கு வந்த புரக்டரைச் சந்திப்பதற்காக வந்த பொன்னையா அம்பாளின் பூசையையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நின்றிருந்தார்.

ஆலய வாசலில் கம்பீரமாக எழுந்து நிற்கும் புதிய ராஜ கோபுரம் பார்ப்பவர் மனதைச் சில நிமிடங்களாவது தன் பால் இழுத்து வைக்கும் சக்தி பெற்றது. கோபுர நுனியில் ஏற்றப்பட்டு விளங்கும் நியோன் விளக்கு இரவை இரவு என்று அறியாமலிருக்கும் ஓர் உணர்ச்சியை ஊட்டவல்லதாக, அன்னை அபிராமி அமாவாசை தினத்தில் அபிராமிப் பட்டருக்குக் காட்டிய நிலவை ஞாபகப் படுத்துவது போல ஒளிர்ந்து கொண்டிருந்தது. கோபுரத்தின் இரு மருங்கும் ஓங்கி வளர்ந்த தென்னைகளும், எதிரே நாற்பதடி உயரத்திற்கு வளர்ந்து நிற்கும் தேர்க் கொட்டகையும், அதன் பின்புறமாக வெள்ளோட்டத்துக்கு ஆயத்தமாக நிற்கும் புதிய சித்திரத் தேரும் அந்தப் பாதையால் வருபவர்களைப் பிரமிக்க வைக்கும் அதிசய

சக்தி பெற்றவையாக விருந்தன.

புரக்டரைச் சந்திக்க வந்த பொன்னையா எல்லாவற்றையும் பார்த்து விட்டு வாசலுக்கு வந்த போது சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் கந்தையாவும் வந்து சேர்ந்தார்.

"ஓ... கந்தையா நீ எங்கே இந்தப் பக்கம்?" என்று கேள்வி எழுப்பினார் பொன்னையா.

"பொன்னையாண்ணை நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள். நீங்கள்..."

"நான் நம்மடை பிரக்கராசியாரைச் சந்திக்க வந்தனான். வெள்ளிக் கிழமை யிலை பின்னேரம் அவர் இங்கை ஓடி வந்துவிடுவார்."

"தேர் வேலை தொடங்கின நாட் தொடக்கம் எங்களுக்குப் பின்னேரத்திலை இங்கே தான் வேலை! அம்மாளைக் கும்பிடுகிறது மாகுது— இதுகளையும் பார்த்து—"

"நல்ல பெரிய தேர் போலை கிடக்கு"

"நல்லாச் சொன்னியள். முப்பத்தெட்டரை அடி உயரம். இலங்கையிலேயே இப்படித் தேர் அமைப்புக் கிடையாது. திருவாரூர் தேருக்குப் பிறகு இங்கேதான் பார்க்கிறன்."

"நல்ல வேலைப்பாடு யார் இந்திய ஆசாரி மாரே"

"உங்கடை கதை, திருநெல்வேலிப் பெடியன் சிவரத்தினம் தான் செய்கிறான்."

"ஆறுமுகத்தின்ரை பெடியனே. அவங்கள் தமயன் தம்பி எல்லாரும் நல்ல வேலை காரர் தான். நானும் பிள்ளை யாருக்கு ஒரு வாகனம் செய்விச்சனான். எங்கடைதேர் உவங்கள் தான் செய்தது."

"பிரக்கராசியார் வாறார் நீங்கள் சந்திக்கிலில் சந்தியுங்கோ" என்று கூறிவிட்டு கந்தையா இளமட்டங்கள் நிற்கும் பக்கமாக நகருகின்றார்.

கோவிலுக்கு வெளியே வாசலில் இளமட்டங்களும், வயது சென்றவர்களும் வேற்றுமையின்றி அரசியலிலிருந்து ஊர் விவகாரங்கள் வரை அலசி ஆராய்வார்கள். பூசை நடைபெற்று முடிந்ததும் கோவில் வீதி திருத்தும் பணியில் இறங்கி விடுவார்கள். பொன்னையாவுக்கு இது எல்லாம் புதுமையாயிருந்தது. புரக்டர் தான் இதற்கெல்லாம் தலைமை தாங்குகிறார் என்றும் இதனால் தான் ஓடி ஓடி வருகின்றார் என்பதும் தெரிந்த போது தானும் அவர்களோடு சேர்ந்து திருப்பணி செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டாராயினும் நினைவோடு பின் வாங்கி விட்டார்.

"அண்ணை நீங்கள் எங்கை வந்தனீங்கள்.?" என்று கேட்டுக் கொண்டே விபூதி பிரசாதத்துடன் வந்தாள் அவரது தங்கை பார்வதி.

"நீ இங்கை வாறனியே.

"ஓம் அண்ணை வெள்ளிக் கிழமைகளிலை வாறனான்."

"தங்கச்சி வந்தவளே.

"அவள் பகலுக்கு வருவாள். நான் தான் இப்ப வந்தனான். வாருங்கோவன் வீட்டை."

"நான் அந்த ஈட்டு விசயமாய் பிரக்கராசியாரைச் சந்திக்க வந்தனான். அது சரி பார்வதி உன்ரைமேனும் அந்தப் பெடிச்சி மதுமலருமாய் அண்டைக்கு பிரக்கராசியார் வீட்டை வந்தவை என்று கேள்விப்பட்டன்."

"என்னெண்டு தெரியாது. அவள் அதிகம் வாறதில்லை. வந்தால் சொல்லுவாள்."

"பேரன் எப்படிச் சுகமாய் இருக்கிறானே."

"அவனுக் கென்ன குறை. நீங்கள் தான் வாறதில்லை."

"எனக் கெங்கை நேரம். இப்ப புகையிலை உலர்த்து அமளி. ஒரு நிமிடம் நான் திரும்பினால் முடிஞ்சுது: இப்பவும் அவர் என்ரை மூத்தவரைத்தான் குடிலிலுக்குக் காவலுக்கு விட்டிட்டு வந்தனான். தங்கச்சி யிட்டைச் சொல்லு ஆறுதலாய் ஒரு நாளைக்கு வாறன்." என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

* * *

மதுமலர் கட்டிலில் ஒருக்களித்துப் படுத்துக் கிடந்தாள். வீட்டு வேலைகளை ஒதுக்கிவிட்டு மனோகரின் வரவுக்காகக் காத்திருந்தவள் கண்ணயர்ந்து விட்டாள். அப்பொழுது தான் மனோகர் உள்ளே வந்தான் அன்று அவனுக்குப் போதை இல்லை. வந்ததும் வராததுமாய் மதுமலரின் அருகில் இருந்து குனிந்து அவளை முத்தமிட்டான்.

திடுக்கிட்டு விழித்தவள் மனோகரைப் பார்த்ததும் "ஏன் லேட். தூங்கிவிட்டேன்." என்று எழுந்திருந்தாள்.

"இன்று..."

"அந்தப் பெண்கள் வந்திருந்தார்களா?

"எந்தப் பெண்கள்?"

"மனோ என்னிடம் பொய் சொல்லாதீர்கள். யார் அவர்கள்?"

"மது அவசரப்படாதே. நான் உண்மையைக் கூறுகின்றேன்." என்று நடந்தவற்றைக் கூறி முடித்தான்.

பிரமை பிடித்தவள் போல அவள் உட்கார்ந்திருந்தாள். அவள் மனமும் உடலும் நடுங்கியது. இதுவரை அவன் தன்னுடன் மட்டும்தான் உறவு வைத்திருக்கின்றான்— என்று நினைத்திருந்தவளுக்கு ஆத்திரம் மேலோங்கியது. அதே சமயம் சாவித்திரியின் ஞாபகமும் வந்தது. அவள் மனோகரை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன மது அப்படிப் பார்க்கின்றாய்."

"நீங்கள் மனிதனா? இல்லை...?

"மது... நீயா..."

"நான்... நான் கேட்கிறேன். நீங்கள் மனிதனா? உங்களுக்கு ஒரு மனைவி இருக்கிறாள். போதாக்குறைக்கு நான் வேறு இருக்கின்றேன். இப்போ விபச்சாரிகளுடன் போகுமளவிற்கு தேவை ஏற்பட்டு விட்டதா? இப்படிப் போனால் நீங்கள் திருந்தப் போவதில்லை. திருமணத்துடன் திருந்தி விட்டீர்கள் என்று நினைத்தேன். ஆனால்..." அவள் விழிகள் நீரை உகுத்தன. அத்துடன் "இனி நீங்கள் இந்த வீட்டிற்கு வரப்படாது. போய்விடுங்கள்." என்று கையை நீட்டிக் காட்டினாள்.

(வளரும்)

# திரையிலே தெறித்த சுடர்ப் பொறிகள்

முனைவர் சாலினி இளந்திரையன்

''துள்ளி வரப் போ'றேன்,—சுருள் சுருளாய்ப் பாட்டுகளை அள்ளிவிடப் போ'றேன் அய்யா, என் சாமிகளே,— இந்தத் திரையைக் கொஞ்சம் தூக்கிடுங்கோ!'' திரைப்படப் பாடல் ஒன்றில் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் ஒலித்துள்ள ஒரு குரல் இது. 1951ல் திரைப்படத் துறையில் புகுந்த இவர், 8-10-1959ல் மறைவதற்குள், சுமார் இருநூறு திரைப் பாடல்களையும் சிற்சில தனிப்பாடல்களையும் எழுதிக் குவித்திருப்பதைப் பார்க்கின்றபோது,— தம்மைப் பற்றியே இவர் இப்படிச் சொல்லிக் கொண்டாரோ என்கிற எண்ணமே நமக்கு உண்டாகிறது. செல்வமோ செல்வாக்கோ இல்லாத எளிய விவசாயியாகிய இந்த இளைஞர் வெகு விரைவிலேயே தலைசிறந்த திரைக் கவிஞராகப் புகழ்பெற்றுவிட்ட உண்மையும் இவருடைய பாட்டு எழுச்சிக்குச் சிறந்த சான்றாக உள்ளது.

## கவிதையின் பின்னணி

1947 ஆகஸ்டு 15ல் இந்திய நாட்டுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. சுமார் 200 ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த மக்கள், தங்கள் சுதந்திர ஆட்சியில் பல புதிய விரைந்த வளர்ச்சிகளையும் மாறுதல்களையும் விரும்பி எதிர்பார்த்தார்கள். சுதந்திரத்துக்கு முன்பே நாட்டில் வலுவாக நிலைபெற்றிருந்த இடதுசாரி இயக்கங்களாலும் சீர்திருத்த இயக்கங்களாலும், மக்களின் பொதுமைநல (சோசலிச) வேட்கை கூர்மையாகி இருந்தது. ஆனாலும், நாட்டில் நடைபெற்று வந்த சுதந்திர ஆட்சி, சிறுகச் சிறுகப் பழமைத் தடங்களையும் நழுவல் நடைகளையுமே புதுப்பித்துக்கொண்டு வந்தது. அதன் விளைவாக, ''ஏழை ஏழையாகவே இருக்க, பணக்காரன் மேலும் பணக்காரனாகிறான்'' என்கிற வெறுப்புக்குரல் எழுந்தது.

''ஏய்ப்போருக்குத் தண்டனை இல்லை, நலிந்தோருக்கு ஆதரவு இல்லை'' என்கின்ற எண்ணலைகள் பரவி வந்த இந்தக் காலக் கட்டத்தில் எழுந்தவர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம். மேற்குறித்த குழப்பங்களுக்கெல்லாம் வர்க்கப் பார்வையற்ற ஒரு மந்த நிலையே காரணம் என்ற ஓர்மையோடு, ''சிக்கல் நிறைந்த வர்க்கங்கள் திருந்த, மக்கள் கலைதான் மலர்ந்திட வேண்டும்'' என்ற முழக்குடன் பிறந்தன அவருடைய பாடல்கள். மக்களின் வாழ்வை அப்பட்டமாகச் சித்தரித்து, அவர்களின் துயரங்களுக்காக வாடிச் சாம்பும் ஒரு குரல் அவருடைய பாடல்களில் அழுத்தமாக விழுந்துள்ளது; சமுதாயத்தை ஓர் அங்கத (Satirical) நோக்குடன் பார்த்து, தீமைக்கு அறைகூவல் விடும் ஓர் எழுச்சிக் குரலும் அதிலே கேட்கிறது.

## சமூகச் சித்திரங்கள்

நாடு விடுதலை அடைந்ததும், ஒவ்வொரு நிலையினரும் தாங்கள் இழந்திருந்த உரிமைகளையும் வசதிகளையும் மீட்டுக்கொள்ளத் துடித்தனர். என்றாலும், ஏற்கனவே வாய்ப்பு உடையவர்களாக இருந்தவர்களே மிகுதியான சுகங்களைத் திரட்டிக்கொள்ள முடிந்தது. யாருடைய முன்னேற்றத்தைக் கருதிச் சுதந்திரப் போராட்டம் நடந்ததோ, அந்தக் கடைத்தர மக்களின் வாழ்விலே வெளிச்சம் படர்வதாகவே தோன்றவில்லை:

இன்பத்தைத் தேடித்தேடி
ஏழைநெஞ்சம் ஏங்குது;
அன்பில்லார் வீட்டில் அது
ரொம்ப நாளாத் தூங்குது!
எந்தச் சாமிக்கும் காது கேக்கலே;—
இல்லாதவனை எட்டிப் பார்க்கலே!

1950—51 வாக்கில் இருந்துவந்த நாட்டு நிலையைப் பற்றிய பட்டுக்கோட்டையின் சித்திரம் இப்படித் தொடங்குகிறது; அது விரிந்து விரிந்து, வண்ணம் பெற்றுப் பெற்று, வேறு நிலைமைகளையும் புலப்படுத்துகிறது:

குழிபறிக்கும் குள்ளநரிகளின் கூட்டமே நாட்டில் பெரிய கூட்டமாக இருக்கிறது. இந்த வாட்டக் கொதிப்பிலேதான், "எல்லோரும் சேர்ந்து ஏமாத்தும் போது முன்னேறும் பாதை ஏது?" என்று மறுகுகிறது கவி உள்ளம்.

உப்புக்கல்லை வைரமென்று
சொன்னால்— நம்பி
ஒப்புக்கொள்ளும் மூடருக்கு
முன்னால்— நாம்
உளறி என்ன, கதறி என்ன?

புண்பட்டுப் போன ஒரு பொதுமைநலநெஞ்சின் புலம்பல் இது. தங்களுக்காக உழைக்க முன்வருகிற நல்லவர்களையே, தீயவர்களோடு சேர்ந்துகொண்டு தீர்த்துக் கட்டி விடும் பாமரத்தனம் மக்களை விட்டு இன்னமும் நீங்கவில்லை!

## அங்கதப் பார்வை

இந்த நினைப்பு முனைக்கு வந்தபிறகுதான் கவிஞருக்கு வேறொரு பக்கம் புலப்படுகிறது:

அண்ணாச்சி எண்ணம்போல்
நடந்திடுமா? — அறிவு
அவ்வளவு சீக்கிரம் தெளிஞ்சிடுமா?
கருத்தும் புரியாமே படிப்பும் வளராமே
திருந்து திருந்துன்னா திருந்திடுமா?

இதைக் கருதியே, வேறோர் இடத்தில், "ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அது தாண்டா வளர்ச்சி" என்று முழக்கமிட்டார் கவிஞர்.

முறையோடு உழைத்துண்ண
முடியாத சோம்பேறி
நரிபோலத் திரிவார் புவிமேலே—நல்ல
வழியோடு போகின்ற
வாய்பேசா உயிர்களை
வதச்சு வதச்சுத் தின்பார் வெறியாலே!

சிலபேரை உழையாதவர்களாக வைத்திருந்தால், அவர்கள், சமுதாயக் கேடுகளுக்குத் தான் நீர் வார்த்துக் கொண்டு இருப்பார்கள்.

மிகப் பெரியது என்று அவர்களே சொல்லிக் கொள்ளும் கடவுளைக் கூட இந்தத் தீயவர்கள் விட்டுவைக்கவில்லை. கடவுளையும் அவர்கள் வியாபாரச் சரக்காகத்தான் ஆக்கி வைத்திருக்கிறார்கள். அந்த ஆண்டவனை நோக்கியே கேட்கிறார் கவிஞர்:

காசு தந்தால்தான் உன்னைக்
காணும் வழி காட்டுவதாய்க்
கதவுபோட்டுப் பூட்டிவைத்துக்
கட்டாயம் பண்ணுவதைப் பார்த்தாயா?

ஒன்றைச் சிறந்தது என்று பறைசாற்றிக் கொண்டே, அதன் மறைவில் சிலபேர் சடைத்துக் கொழுக்கத் தொடங்கிவிடுகிற போலி நடைதான் சமுதாயத்தையே அழித்துவிடக் கூடிய பெரிய நோய். இந்த நோய், இந்தியச் சமுதாயத்தில்,— அன்பு, பண்பு, நாகரிகம், கடவுள் என்பவைகளின் பேரால் அதிகமாகவே பரவிவிட்டது. அதன் காரணமாக, "எது சரி, எது தவறு? எது உயர்வு, எது தாழ்வு? எது சீரான நடை, எது மாறான நடை?" என்கின்ற தெளிவே மழுங்கிப்போய் விட்டது!

## அன்புத் திட்டல்

இந்தத் தடுமாற்றத்தின் காரணமாகவே, "காலநிலையை மறந்து சிலது கம்பையும் கொம்பையும் நீட்டுது,— புலியின், கடுங் கோபம் தெரிஞ்சிருந்தும் வாலைப் பிடிச்சி ஆட்டுது!" உழைக்கும் வர்க்கமாகிய புலியை வாலுருவியதால், உலகின் மற்றப் பகுதிகளில் சுகவாசிகளுக்கு ஏற்பட்ட விபத்தை இங்கே நினைவூட்டுகிறார் கவிஞர். ஆயினும், இப்படியான ஓர் ஓர்மை இந்த நாட்டிலே இன்னும் சரிவர ஏற்படவில்லை என்பதையும் கவிஞர் மறந்துவிடவில்லை.

காடு மேடுகளைச் சீர்திருத்தி நல்ல கழனிகள் ஆக்கியவர்களும் கண்ணீரிலே பயிர் வளர்த்து அதை நாட்டுக்கு ஈந்தவர்களும் உழைப்பாளிகள். ஆனாலும், 'காடு விளைந்தென்ன, நமக்குக் கையும் காலும்தானே மிச்சம்!' என்ற நிலையே அவர்களின் வாழ்வாக உள்ளது. அது மட்டுமா? பட்டப்பகல் திருடர்களைப் பட்டாடை மறைக்கிறது; இந்தப் பஞ்சையையே, எல்லோரும் சேர்ந்து திருடன் என்று உதைக்கிறார்கள்!

இதைக் கண்டு கொதிப்படையும் கவிஞருக்கு, 'இவன் சரியாக இருந்து வலுவாக நின்றால் அவன் இவனிடம் வாலாட்ட மாட்டான் அல்லவா?' என்ற எண்ணம் உண்டாகிறது. எளியவர்களை நோக்கி உருக்கமாகப் பேசுகிறார்:

கத்தும் பறவை கனிமரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே — தலைப்
பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி
பேதம் வளர்த்திடுதே!

உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியில் கலக்குது;
ஒற்றுமை இல்லா மனிதக்குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது!

பிரிந்து சிதறிக் கிடக்கும் இவர்களுக்காக இவ்வாறு கண்கலங்கும் கவிஞர், அவர்களை நோக்கி நேரிடையாகவே கேள்வியை நீட்டுகிறார்:

முடியிருந்தும் மொட்டைகளாய்,
மூச்சிருந்தும் கட்டைகளாய்
விழியிருந்தும் பொட்டைகளாய்
விழுந்துகிடக்கப் போறீங்களா?

## தீன்பாட்டுத்திரட்டு-3.

# தூதுவளை

பாதுகாப்போடு பறித்தே பொரித்திட்ட
தூதுவளை இலைக்கும் சோற்றுக்கும்—
ஏது நிகர்?
ஒரு நேரம் உண்டாரும் ஒரு நாளும்
தப்பாமல்
தருமாறு வேண்டுவார் தான்!

—"சாப்பாட்டுக் கவிராயர்"

வரம்பு மீறி வலுத்த கைகள்
மக்கள் கழுத்தை நெரிக்குது;
விருப்பம் போல நரிகள் சேர்ந்து
வேட்டையாடிக் குவிக்குது!

மக்கள் ஆதரவற்ற நிலையிலும் கவனிப்பாரற்ற நிலையிலும் இருப்பதோடு, மரம் ஏறி விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல,—கொடியவர்கள். அவர்களை வாழ விடாமலும் வளர விடாமலும், சிதறடித்துக் கொண்டும் இருக்கிறார்கள்!

இந்த வேதனைப் பொருமலோடு இந்தியத் தாயை நோக்கி வினவுகிறார் கவிஞர்:

சுதந்திரத்தைப் பெற்றமுதல்
ஓர்நா ளேனும்
துளியும் நீ மகிழ்ந்ததுண்டா?
உன்றன் மக்கள்
உகந்துமன ஒற்றுமையாய்
வாழ்ந்த துண்டா?
உன்னைத்தான் மதித்ததுண்டா?—
உயர்ந்த துண்டா?

இந்தப் பொருமல்தான் 1950க்கும் 1960க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் எழுந்த புதிய இலக்கிய அலை.

உற்பத்தி பெருகுகிறது, தொழில் வளருகிறது என்கிற புள்ளிவிவரங்கள் விரிந்து வந்த போதே, மறுபக்கம், "வாழ வழி இல்லையே!" என்கின்ற எளியோரின் அவலக்குரலும் அலை மோதி எழுந்துகொண்டே இருந்தது:

இன்பம் என்று சொல்லக்
கேட்டதுண்டு—அது
எங்க வீட்டுப் பக்கம் வந்ததுண்டா?
துன்பம் வந்து எங்களைச்
சொந்தம் கொண்டாடுது;
சூழ்நிலையும் அதற்கு
ரொம்பத் துணையாகுது!

இதற்குக் காரணம் என்ன?... இந்த எளியோர் உழைக்கவில்லையா? நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்களிலே அவர்களுக்கு உரிமை இல்லையா? எல்லாம் உண்டு. ஆனாலும்,-

நல்லவர் செய்த செயல்களிலே—பயிர்
நடமாடுது வயல்களிலே
நெல்லு கதிராகி முதிரும் நாளிலே
நில முதலாளிகள் கையிலே—போய்
நிறைந்திடும் மார்கழித் தையிலே!

இந்த எதார்த்த நிலையே எளியோரை அழுகைத் தளத்துக்கும். அவநம்பிக்கைத் தடத்துக்கும் தள்ளுகிறது. "வாழை நிலைக்குது; சோலை தழைக்குது;— ஏழைகளுக்கு அதில் என்ன கிடைக்குது? கூழைக் குடிக்குது; நாளைக் கழிக்குது;— ஓலைக் குடிசையில் ஒண்டிக் கிடக்குது!" இந்தப் பரிதாபத்தில் அழுந்திக் கிடக்கிற எளியவனின் (உழைப்பாளியின்) மனைவி, "காடு விளைந்தென்ன மச்சான்,— நமக்குக் கையும் காலும்தானே மிச்சம்!" என்றுதான் அலமர வேண்டியுள்ளது.


### ஒரு விளக்கம்

இந்தக் குரல்களைக் கேட்கின்றபோது, "ஒரே கருப்பாக, ஒரே இருட்டாக இருக்கிறதே. இப்படி ஓர் அவலக் குரலை எழுப்புவதற்கு ஒரு புதிய கவிஞன் எதற்கு? அதற்குத்தான், ஏற்கனவே, இங்கே பலபேர் இருக்கிறார்களே!" என்று தளர்கிறோம்; பட்டுக்கோட்டைக் கவிஞர் நமக்கு விளக்கம் சொல்ல முந்துகிறார்: எதுவுமே நடக்கவில்லை; எழுச்சிக் கதிரே எழவில்லை' என்று நான் சொல்லவில்லை; ஆனால்,—

அன்பிருக்குது அறிவிருக்குது
பண்பிருக்குது பாரிலே — அதை
அழிக்க எண்ணித் திருட்டு நரிகள்
குழிபறிக்குது வேரிலே!

---

ஒருவர்:- உங்கடை மகளுக்கு ஆயிர மாயிரமாய் சீதனம் கொடுக்கிறீர்களே, மாப்பிள்ளை என்ன வேலை?



மற்றவர்:- அவரா? ஆள் தேங்காய் வியாபாரி!

—ஜே. வி. எஸ்: நாதன்
முள்ளியவளை

---



கணவன்: நீ ஏன் இந்தச் சேலையை இருநூற்றைம்பது ரூபாய் கொடுத்து வாங்கினாய்?

மனைவி: அடுத்த வீட்டு மாலாவும் வாங்கியிருக்கிறாள் அதனால்தான்.

—இளவாலை விஜயேந்திரன்

---

முறையைத் தெரிந்து நடந்து,
பழைய நினைப்பை மறந்து
உலகம் போற பாதையிலே
உள்ளம் தெளிந்து வாரீங்களா?

கவிஞரின் வேதனைக் குமுறல்கள் ஒன்று குவிந்து கொந்தளிக்கும் பாடல் இது.

## கனிந்த அறிவுரை

இந்த அன்புத் திட்டலால் அவர்களை எழுப்பி வைத்துக்கொண்டு,— (அல்லது அவர்கள் எழுந்துகொண்டதாக இவரே முடிவு செய்துகொண்டு),— ஆசிரிய நிலையிலும் அன்புத் தந்தையின் நிலையிலும் நின்று அவர்களுக்கு அறிவுரைக்கிறார் கவிஞர்:

"ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அது தாண்டா வளர்ச்சி" என்கின்ற குரலோடேயே,— அந்த அறிவு வளர வேண்டிய முறையையும், அதனோடு தன்மான உணர்ச்சி பின்னிப் பிணைந்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துவது (மார்க்சியக் கவிஞர்களுக்குள்) இவருடைய தனித்தன்மை:

ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே-நீ
ஏன்படித்தோம் என்பதையும்
மறந்துவிடாதே!

படிப்பு தொடர்ந்து நடைபெற வேண்டும்; எந்தப் படிப்பும் வாழ்வை வளஞ்செய்வதற்கு உரிய நல்ல கருவியே என்கின்ற தெளிவும் இருக்கவேண்டும். அத்துடன்,

நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்
காலம் தரும் வளர்ச்சி — உன்
நரம்போடுதான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி!

காலம் எத்தனையோ பாடங்களைப் புகட்டுகிறது; இன்ப அனுபவங்களாலும் துன்ப அனுபவங்களாலும் நம்மைப் பண்படுத்திக் கூர்மைப்படுத்துகிறது. அந்தப் பயிற்சி வரலாற்றிலே வந்து வந்து குவியும் பல மோதல்களிடையே, நம்முடைய தன்மான உணர்வை இழந்துவிடக் கூடாது.

ஒருவேளை, நம்மை அறியாமல் ஏதேனும் தவறு நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? ஒரு சமுதாயத்தின் ஓர் அங்கமாக வாழும்போது, நமது சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் நாமே எப்போதும் அதிகாரியாக இருக்க முடிவதில்லையே! அப்படிப்பட்ட வெளி நெருக்கடிகளால் ஏற்படும் தவறுகளுக்காக யாரையும் 'நரகத்'திலே தள்ளிவிடவில்லை கவிஞர்; அதனின்று விடுபட அழகான வழி சொல்லுகிறார்:

சிந்தித்துப் பார்த்துச் செய்கையை
மாத்து — தவறு
சிறிசா இருக்கையில் திருத்திக்கோ!
தெரிஞ்சும் தெரியாம நடந்திருந்தா-அது
திரும்பவும் வராமே பாத்துக்கோ!

இந்த அறிவுரையோடு ஒட்டிக்கொண்டு ஒரு முக்கியமான எச்சரிக்கைக்குரலும் பிறக்கிறது

பள்ளம் மேடுள்ள பாதையிலே
பார்த்து நடக்கணும் காளைகளே!
பழைய போக்கிலே பயனில்லே— நல்ல
விஷயம் இருக்கணும் மூளையிலே!

சமுதாயம் மேடுபள்ளம் உள்ளதாக இருக்கிறது; அதை மாற்றிச் சமப்படுத்தும் ஓர்மையும் அதற்கான முயற்சியும் தொடங்கிவிடும் போதே,— அந்த மேடு பள்ளங்களாலேயே கொழுத்து வருகிற குள்ளநரிகள் எதிர்த்திட்டங்களை வகுப்பார்கள். இவர்களை மீறிச் செயல்படுவதற்குப் பழைய சிந்தனைகளும் தத்துவங்களும் போதமாட்டா; புதிய புதிய கருத்துக்களையும் நடைகளையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

—அடுத்த இதழில் முடியும்




உங்கள் சருமத்தின் பாதுகாப்புக்கும்,
தேக சுகத்துக்கும்,
மேனியின் பளபளப்புக்கும்,
சுத்தமானவேப் பெண்ணை கலந்த

# நீம் வாசனை சோப்

உபயோகியுங்கள்.

—மில்க்வைற் தாயாரிப்பு

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. எண் - 77 யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

கிளை;
79. மெசன்ஜர் வீதி, கொழும்பு-12. தொலைபேசி: 36063

## அண்ணா தயாரிப்புக்களே.

உங்கள் வாடிக்கை கடைகளிலும்
இலங்கையின் எல்லா கடைகளிலும் கிடைப்பது

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்திகளே.

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளை அனுப்பி விரும்பிய பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:—

# அண்ணா தொழிற்சாலை

இணுவில். டெலிபேன்: 7412

# கோப்பிகளில் கலப்படம்?

## ஓர்
## முக்கிய அறிவித்தல்

Brownson
Industries

அரச, உணவு - மருந்துகள் சட்டத்திற்கு அமையவே

## "பிரவுண்சன் கோப்பி"

தயாரிக்கப்படுகிறது.

ஆகவே,
கடைகளில் விற்பனை செய்யப்படும் சில கோப்பிகளில் பலவகை கலப்படப் பொருட்கள் (நிலக்கடலைக் கோது உட்பட) கலப்படம் செய்யப் படுவதாக சுகாதார ஆய்வினர்களின் அறிக்கை களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனல்.,

## "பிரவுண்சன் கோப்பி"

எவ்வித சேர்க்கையும் அற்ற நூற்றிற்கு நூறு வீதம் தூய்மையான கோப்பியென உறுதிப் படுத்துகின்றோம்.

## பிரவுண்சன் இன்டஸ்ரீஸ்,

80 1/4, பிறைஸ் பிளேஸ்,

கொழும்பு-12. தொலைபேசி: 27197.


இப்பத்திரிகை 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12ல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அதே முகவரியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது

